திராவிடநாடு



சினத்ததிகாரம்

மா. கி. தசரதன் M.A.

'யார்? மேட்டுத்தெருவில் இருக்கிறாரே அவரா — ரொம்பவும் கோபக்காரராயிற்றே' என்று யாரைப்பற்றியாவது நாம் சொல்லாமல் இருப்பதில்லை. நாம் இன்னொருவரைக் கோபக்காரர் என்று சொல்லிக்கொண்டிருக்கும்போதே நம்மை யாராவது எங்காவது கோபக்காரர் என்று சொல்லிக் கொண்டிருப்பார்கள். இப்படி ஒருவரை ஒருவர் கோபக்காரர் என்று சொல்லுகின்ற அளவுக்கு நம் எல்லோரிடத்திலும் கோபம் இருக்கிறது.

இருந்தாலும் இது நல்லதல்ல என்று சொல்லுகின்றோம், 'கோபம் கொள்ளற்க' என்று அழகாகச் சொல்லுகின்றோம். 'ஆறுவது சினம்' என்று ஆத்திசூடியும் கூறுகின்றது. அணுவைத் துளைத்து எழுகடலைப் புகட்டியது போல் அனைத்தையும் தன்னுள் கொண்டிருக்கும் திருக்குறளும் சினங் கூடாது என்று கூறுகின்றது. இருந்தும் நம் எல்லோரிடத்தும் சினம இருக்கிறது. இருப்பது மட்டுமல்ல-யார் எதைச் சொன்னாலும் கேட்டுக்கொண்டு பொறுமையைக் கடைப்பிடித்து அமைதியாக இருப்பவனை உலகம் 'சொரணை அற்றவன்' என்கிறது. அதுவும் 'சூடுசொரணை இல்லாதவன்' என்று ஒரு அடைமொழி சேர்த்துச் சொல்லுகின்றது.

'மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல்' என்கிறார்களே அதைப்போல இருக்கிறது இந்தக் 'கோபம்.' இது இருந்தால் 'ஆள் பொல்லாதவன் ரொம்பவும் கோபக்காரன்' என்று வசைபாடுகின்றது, இந்த வசைக்கு அஞ்சி வாளா இருப்பவனை 'வகையற்றவன்' என்று தூற்றுகின்றது.

பாவம்! மனிதன் என்ன செய்வான்?

ஒருவேளை உப்பும் இந்தக் கோபமும் ஒன்றாக இருக்குமோ? இரண்டுக்கும் ஒரே வகையான தன்மை இருக்கிறதே!

உப்பு எதிலும் இருக்க வேண்டும், ஆனால் வேண்டிய அளவு இல்லாவிட்டால் 'சப்' என்று ஆகிவிடுகின்றது. 'உப்பில்லாத பண்டம் குப்பையிலே' என்று பழமொழியே இருக்கிறது. ஒரு கல் உப்பு மிகுதியாக இருந்துவிட்டாலோ சொல்லவே வேண்டியதில்லை. ஒரே 'உப்பு, சீச்சி உமிழ்' என்று சொல்லச் செய்கின்றது, சமைத்தவள் அத்தை மகளாக இருந்தாலும்!

அதைப்போலத்தான் கோபமும், கூடினாலும் குறைந்தாலும் தொல்லை தருகின்றது. அளவோடு கொள்க என்று சொல்லுகின்றது. அளவுக்கு மிஞ்சினால் தான் அருமருந்தும் நஞ்சாகிவிடுமாமே.

இந்த 'நாசுக்கான' பொருள் எப்படி நம்மிடத்தில்வருகின்றது? எங்கிருந்து வருகின்றது? ஏன் வருகின்றது?

"மணி! நான் வருவதற்குள் இந்தக் கணக்கைப் போட்டுவை" என்று தந்தை தன் மகனிடம் சொல்லிவிட்டு வெளியே போகிறார். திரும்பி வரும்போது பையன் விளையாடிக் கொண்டிருக்கின்றான், கணக்கைப் போடவில்லை. இதைக் கண்டதும் அந்தப் பொல்லாத கோபம் எங்கிருந்தோ ஓடோடியும் வந்து அந்தத்தந்தையின் கைகளில் புகுந்துகொள்ளுகின்றது. மகனுடைய முதுகு அதை அறிகின்றது.

நான் சொன்னேன் இவன் கேட்கவில்லையே என்ற எண்ணம் கோபத்தைத் தூண்டிவிட்டது இங்கே. யார் இந்த 'நான்?' இந்த 'இவனை'விடப் பெரியவன். எங்கே 'நான்' பெரியதாக இருக்கிறதோ அங்கே கட்டாயம் கோபம் வரும்.

'என்னையா அப்படிச் சொன்னான்? அவனா சொன்னான்?' என்று ஒரு உள்ளம் திடீரென்று வெடிக்கின்றது, தன்மேல் இருக்கும் நம்பிக்கை—தன்னைப்பற்றிய நல்ல மதிப்பு இதை இன்னொருவன் குறைத்துவிட்டான் அல்லது குறைக்க எண்ணினான் என்ற உடன் மனம் என்ற நிலத்தில் கோப முளைகள் தோன்றுகின்றன. அந்த முளைகளை அப்படியே விட்டால் அவை பகைமை என்ற பழங்களைப் பலனாகத் தருகின்ற வரை வளருகின்றன. இந்தப் பகைமைப் பழத்தை உண்டவன் பல வகையில் திண்டாடுகின்றான்.

இவ்வளவு தொல்லையைத் தரும் இந்தக் கோபத்தை எப்படித் 'தொலைத்துத் தலை முழுகுவது?' என்று என் நண்பர் சிறுவீதியாரைக் கேட்டேன் ஒருநாள்.

"இதைப்போய் என்னைக் கேட்பானேன்? சினத்ததிகாரத்தைப் படித்தால் தெரிகின்றது" என்றார்.

எனக்கு ஒன்றும்விளங்கவில்லை. "சினத்ததிகாரமா? என்ன அது?" என்றேன் நான்.

"என்ன சொல்லுவது, கொஞ்சமாவது யோசிக்க வேண்டும்" என்றார் அவர் கோபமாக!

"நண்பரே—என் மீது சினம் கொள்ள வேண்டாம். எனக்குச் சிலப்பதிகாரம் தெரியும், பொருளதிகாரம் தெரியும், சொல்லதிகாரம் தெரியும் எழுத்ததிகாரம் தெரியும்—ஆனால் இந்தச் சினத்ததிகாரம் கேள்விப்பட்டது கூட இல்லையே"

"நான் மட்டும் என்ன சொல்லுகின்றேன்—அந்தச் சிலப்பதிகாரத்தைத்தான் சினத்ததிகாரம் என்றேன்" என்றார்.

நான் திகைத்து நோக்கினேன்.

"என்னய்யா என்னமோ நடுக்கடலில் கப்பல் கவிழ்ந்ததைப் போல் விழிக்கின்றீர். சிலம்பின் அதிகரித்தலை உடையது சிலப்பதிகாரம்; அதேபோல் சினத்தின் அதிகரித்தலை உடையது சினத்

ததிகாரம் இவ்வளவுதானே'' என்றார் அவர்.

"கொஞ்சம் விரிவாகத்தான் விளங்கச் சொல்லுங்களேன்'' என்று கேட்டேன்.

"மாதவியின்மீது கொண்ட கோபம்தானே கோவலனைத் தனியே போகச்செய்தது?'' என்றார் அவர்.

"ஆமாம்''

"அதேபோல் பாண்டியன்மீது கண்ணகி கொண்ட கோபம் தானே கொடுமையை விளைவித்தது?''

"ஆமாம், காவாநாவின் கனக விசயர்மீது சேரன் செங்குட்டுவன் கொண்டதும் கோபம்தான்'' என்று நானே முந்திக்கொண்டேன்.

"இப்பொழுது சொல்லுங்கள் சிலப்பதிகாரத்தில் சினத்தின் அதிகரிப்பு இல்லையா?'' என்று கேட்டார்.

"ஆமாம் உண்மைதான்'' என்று ஒப்புக்கொண்டேன்.

ஆனாலும் நான் கேட்டதற்கு அவர் விடைசொல்லவில்லை என்பது நினைவிற்கு வந்தது.

"நான் சினத்தைப் போக்க வழி அல்லவா கேட்டேன்'' என்றேன்.

"இந்த மூன்று நிகழ்ச்சியையும் பாருங்களேன். நான் என்ற உணர்ச்சி மிகுந்தபோது அங்கே இருந்த அன்பு வரண்டுவிட்டது. வேற்றுமை மிகுந்தது. அதனால் சினம் புகுந்தது. சினம் தணிந்ததும் பழைய அன்பு அங்கே வந்து அமர்ந்தது — மனம் அமைதி அடைந்தது'' என்றார் அவர்.

"உம்'' என்று அவரை ஊக்கினேன்.

"கோவலனுக்கு மாதவியிடம் இருந்த சினம் தணிந்துவிட்டதால்தான் 'தீது இலள்' என்று 'தளர்ச்சி நீங்கினான்'

'கண்ணகிக்குப் பாண்டியன்மீது இருந்த சினம் தணிந்துவிட்டதால்தான்

'தென்னவன் தீது இலன்' என்று சொன்னதோடு

'நானவன் தன் மகள்'

என்று தன்னையே பாண்டியனின் மகளாகக்கொண்டாள்.

"இதுதான் அதிலிருந்து தெரியும் பாடம்'' என்றார் அவர்.

அவர்போனபின்னர் நான் சிலப்பதிகாரத்தை விரித்துவைத்துக்கொண்டு கானல் வரிப் பாடலக்கை இசை கூட்டிக்கொண்டிருந்தேன். ஆனால் என் மனமோ மீண்டும் மீண்டும் சினத்தைப் பற்றியே எண்ணச் சுற்றிக்கொண்டலைந்தது.

சிலப்பதிகாரத்தில் வரும் இந்த மூன்று சினங்களினால் என்ன என்ன பலன்கள் என்று எண்ணியவாறே பொழுதைக் கழித்தேன்.

மீண்டும் ஒரு புதிய உண்மை பளிச்சிட்டது. இந்த மூன்று வகைக் கோபங்களும் மூன்று வகையானவை. மாதவிமீது கோவலன் கொண்டது **நான்** என்ற உணர்ச்சியினால். பாண்டியன்மீது கண்ணகி கொண்ட கோபம் **என் கணவன்** என்று கொஞ்சம் விரிந்தது. வடவர்மீது செங்குட்டுவன் கொண்ட கோபம் நமது **நாடு** என்ற பரந்த எண்ணத்தினால். தன்னலம் குறையக் குறைய கோபத்தினால் ஏற்பட்ட பலன்களும் சிறந்தன — என்று எண்ணி வியந்தேன்.

நமக்காக என்று இல்லாமல் நாட்டுக்காக என்னும்போது கோபம்கூடக் குணமாக மாறிவிடுகின்றதே! நாட்டுக்கு அவ்வளவு ஆற்றலா என்று வியந்தேன்.

ஆனால் கோபம் எதற்காக வந்தாலும் அதனால் பலவகையான கேடுகள் உண்டாகின்றன என்பதை இந்த மூன்று கோபங்களுமே காட்டுகின்றன.

கோவலனால் மாதவி துயரக்கடலில் விழ்ந்தாள்; கண்ணகியால் மதுரை நகர மன்னன் உயிர் துறந்தான், மக்கள் துன்புற்றனர்; சேரனின் சினத்தினால் வடபுலத்து வீரர் வாடினர். பிற உயிர்க்குத் துன்பம் தந்துதான் சினம் தணிகின்றது.

நம்முடைய ஆற்றல் செல்லுபடியாகின்ற இடத்திலே இது. நம்மைவிட ஆற்றல் மிகுதியானவர்கள்மீது கோபம் கொண்டால் அதைச் செலுத்தமுடியாமல் நம்முடைய மனம் அதையே எண்ணி எண்ணிக் குமுறுகின்றது.

ஆக, கோபம் எப்படியும்கேட்டை விளைக்கின்றது.

அதைத் தொலைக்க என்னதான் வழி? அதற்கும் சிலப்பதிகாரம்தான் வழிகாட்டுகின்றது.

"நெறியைவிட்டு நீங்கியவர்கள் நீர்மை அல்லாதன சொன்னாலும் அது அவர்களுடைய அறியாமை என்று அறியவேண்டும்'' என்று அந்நூலில் கூறப்படுகின்றது.

நான் பெரியவன் என்ற எண்ணம் பெரியதாக ஆகிவிட்டால், கோபம் வருகின்றது, அந்த எண்ணம் மிகப் பெரியதாக ஆகி— அவனுக்கு என்ன தெரியும், பாவம் போகட்டும்—என்று எண்ணினால் கோபம் தணிந்துவிடும்.

சினத்தின் அதிகரித்தலைப்பற்றி இப்படி எண்ண எண்ண விரிந்துகொண்டேதான்போகும். ஆனால் ஆசிரியரின் கோபம் ஒன்று இருக்கிறது. அன்பு அதை அடக்கிவிட்டாலும் கூட 'இதென்ன தொல்லை' என்று கருதும் இதனைப் படிப்பவர்களின் கோபம் இருக்கிறது. எதற்கு அஞ்சாவிட்டாலும் இதற்கு அஞ்சித்தானே தீரவேண்டும்!

★

ஜூன் 3, 4, மித்திரன் தலையங்கம்,

"முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் ஆறு கோடி ஏகராவுக்குப் பாசனவசதி செய்வதற்கெனப் பெருவாரியாகச் செலவு செய்தபின், இறுதியாக நான்கு ஏகராவுக்கே அத்தகைய வசதி கிடைத்தது. பீகாரில் ஏராளமான செலவில் அமைக்கப்பட்ட குழாய்க் கிணறுகள், விவசாயிகளுக்கும் அதிகாரிகளுக்கும் ஏற்பட்ட கட்டணத் தகராறு காரணமாக உபயோகிக்கப்படாமலிருந்து வருகின்றன. திட்டங்கள் தக்க முன்யோசனையுடன் அமைக்கப் படுவதை இங்கிலை குறிப்பதென்றென அ. இ. கா. கமிட்டிக் கூட்டத்தில் அங்கத்தினர்கள் எடுத்துக் காட்டினர். அங்கு மத்ய மந்திரிகளும், ராஜ்ய மந்திரிகளும் பிரசன்னமாயிருந்தும், அவர்களில் எவரும் இதற்குத் தக்க சமாதானம் கூற முன்வரவில்லை.''

இஸ்லாமும் தமிழும்

கி. பி. 9-ம் நூற்றுண்டின் பிற்பகுதியில் எகிப்தில் வாழ்ந்த அராபியக் குடும்பங்களுக்குப் பேராபத்து வந்தது. நெறிதிறம்பிய மன்னன் ஆட்சியிலே நாடு சீர்குலைவது இயல்பேயல்லவா? நன்மக்கள் நாட்டைவிட்டுத் தம் குடும்பங்களோடு வெளியேறினுர்கள். அவர்களில் சிலர் தமிழ் நாட்டில் தஞ்சம் அடையத் துணிவுகொண்டு, கப்பல்களில் ஏறிச் சொல்லொணுத துன்பம் அடைந்து ஒருவாறு தென்குமரியைக் கடந்து பாண்டி நாட்டின் துறைமுகமாகிய காயலில் வந்து இறங்கினுர்கள். பாண்டிய மன்னரைக் கண்டு தங்கள் துன்ப நிலையை எடுத்து இயம்பினுர்கள். துன்பம் துடைக்கத் தோள்தட்டி முன் வந்தான் பாண்டியன். 'அஞ்சேல்' என்று அவர்களுக்குக் கொடுத்தான் அடைக்கலம். சீர்குலைவுற்ற அவர்கள் வாழ்க்கை சீர்பெற வேண்டிய சாதனங்களையும் வழங்கினுன்.' அவர்களது உரிமைகளையும், கடமைகளையும் வகுத்து, தாமிரப் பட்டயமும் தந்தான், அப்பட்டயம் தமிழரின் மாண்பை உலகிற்குப் பறைசாற்றும் ஓர் அழியாத செல்வம். அதிலுள்ள சில பகுதிகளைக் கீழே தருகிறேம்.

"அரபி நாட்டு மிஸறு (எகிப்து) தேசாதிபதியின் கொடுங்கோலுக்கு அஞ்சி, மரக்கல யாத்திரையாய் கர்த்தர்களின் தேசச் செம்பி நாட்டில் பாசறை வகுத்து கர்த்தர்களின் சமூகம் கொடுத்து, அந்நாட்டில் குடியேறி இருக்கத் தாமிரப் பட்டயம் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டவர்களின் வம்சமும்; எண்ணிக்கையும் கீழ்வருமாறு:—

ஆசீம் வம்சத்தார் (23); நாச்சியார் பெண்டு (9); பெண் (6); அடிமை (4); பாரூக் வம்சத்தார் (43); நாச்சியார் பெண்டு (16); பெண் (9); அடிமை (7); பக்கிரி வம்சத்தார் (39); நாச்சியார் பெண்டு (24): அடிமை (12), உமையா வம்சத்தார் (14); நாச்சியார் பெண்டு (5); அடிமை (2) இராணுவ யுத்தர் (16); ஹவரகன் (3).

இவர்கள் ஒருமனப்பட்டு, முகம்மது கல்ஜிக்குத் தாமிரப் பட்டயம் கொடுக்க கேட்டுக்கொண்டபடியால் இந்தக் குடியானவர்கள், மிஸரு தேசத்து காயிரூன் (கெய்ரோ) ஊரில் வசித்தோர் ஆனபடியால் தாமிரப் பட்டயம் கொடுக்கும் ஊருக்குக் 'காயிறூன் பட்டணம்' என்ற நாமமும், மரக்கல யாத்திரையாக வந்ததால் இவர்களுக்கு மரக்கலராயர் என்ற நாமமும் நாம் சூட்டித் தாமிரப் பட்டயங் கொடுக்கஉத்தார மருளி அரண்மனையார் கற்பித்தது.

'தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்கு மேற்கு, சிவந்தார்குளம், முத்தையாபுரம், முள்ளக்காடு,

K. M. K. அப்துல்காதர் எம்.ஏ., பி.டி.,

கோபுரங்காடு, மஞ்சனக்காயல், கொற்கை, குலைநெல்கரிசை, முக்காணி கொலுவுத் துறை, ஆற்றூர், அதைச் சேர்ந்த மங்கலம், சொர்க்கப்பிள்ளை கரை, பின்னைக் காயல், ஆவரங்காடு, தண்ணீர்ப் பந்தல், கீரனூர், நல்லூர், அம்மன் புரம், பள்ளிப்பத்து, மணற்காடு ராஜமன்னியபுரம், வீரபாண்டியன் மங்களபாடி இவற்றுள்ளடங்கிய குடிகளுக்கு மகம்மது கல்ஜி மரக்கலராயன் கற்பனையும், அவனுக்கு இறைவரி செலுத்தக் கடமையும் பள்ளிப்பத்து, அம்மன்புரங்கண்டு முதல் லாபத்தில் ஜெப ஆலயங்கள் கட்டுப் பாதியும், தண்ணீர்ப் பந்தல் கண்டு, முதலில் மரக்கலராயனுக்குப் பாதி உப்பளமும், கன்னி முதல் மன்னுர் மணல்மேடு ராமேஸ்வரம் வரை, இந்தக் குடியானவர்கள் சலாபம் முத்துக் குளிக்க அம்பள உம்பளமும் தூதுகுடி மாரியம்மன் கோவிலுக்கு தோணி ஒன்றுக்கு 20-முத்துச் சிப்பியும், சித்தன் லாசருக்கு 20-முத்துச் சிற்பியம் அம்பள உபபள நிந்தமும்,

'அந்தந்த வருஷம் மகர மாசத்தில் அரண்மனைக்குமரக்கலராயன் 30-பொன்னும், உப்பு லாபத்தில் 100-பொன்னும் 25-பொன்னும், செலுத்திவிடக் கடமையும், ஒரு பொன் எடையும், அதற்கு மேற்பட்ட ஆணி முத்தும் வலம்புரிச் சங்கும் அகப்பட்டால், அவற்றை மரக்கலராயன் அரண்மனைக்கு சகல மேள வாத்தியத்துடன் செலுத்திவிட அரண்மனைக் கற்பனையும்,

'அரண்மனையார் உத்தரவிற்கு நாஞ்சிநாட்டு அதிபன் கொடுத்த வண்ணுன் — 5. ரெட்டியாபட்டி பாளையக் கிருஷ்ண நாயக்கன் கொடுத்த புதிய முத்தூர் மேள வாத்தியக்காரன் 5க்கும், குடியானவர்கள் செலவு கொடுத்துக் கொள்ளவும். பக்கிரி வம்சத் தலைவன் முகம்மது கல்ஜி மரக்கலராயன் தேசாதிபதி யாருக்கு, வம்சத் தலைவன் உமறு மஸ்கூறு

(13-ம் பக்கம் பார்க்க)

ஏன், இந்த விளக்கம்!!

15] ஆண்டு சந்தா ரூ. 8 [16-6-57] தனிப் பிரதி 10-காசு [இதழ் 48

கிளம்பிவிட்டார்! வழக்கம்போல நேரு பண்டிதர், விமானமேறிக் கிளம்பிச் சென்றுவிட்டார்!

எதில் இல்லாவிடினும் இப்படி உலகம் சுற்றுவதில் 'உனக்கு நானா! எனக்கு நீயா!!' என்கிற போட்டி இருந்துகொண்டேயிருப்பதை நாடு அறியும். ஊர் சுற்றுவதில் பெயர் போனவர்கள் என்று பிற்காலச் சரிதம் இவர்களைப் பற்றிக் கூறும்!!

இவ்விதம் கிளம்புவதற்கு முன் நேரு, தன் மாநில முதலமைச்சர்களுக்கெல்லாம் ஒரு கடிதம் தீட்டி அனுப்பியிருக்கிறாராம். அந்தக் கடிதத்தில், அறிவுரையும், எப்படியெப்படி நடந்துகொள்ள வேண்டும் என்கிற விபரமும், உணவுப் பற்றுக் குறையைச் சமாளிக்கும் யோசனைகளும் இருக்குமென்றே எவரும் கருதுவர். ஆனால் இந்தியப் பிரதமர் அவைகளைப் பற்றி எழுதவில்லை—சீனாவைப்பற்றி எழுதியிருக்கிறார்.

என்ன அவசியம், என்பீர்கள்! அவசியம் இல்லாமலா எழுதுவார், நேரு? இப்போது இங்கே எப்படி காங்கிரஸ் அரசு, சிக்கலிலும் குழப்பத்திலும் மாட்டிக்கொண்டு அவதிப்படுகிறதோ, அதே நிலைதான் சீனாவிலும் இருக்கிறதாம்!! நேரு அவர்களை, சீனாவில் நிலைமை எப்படி என்று எவரும் கேட்கவில்லை. ஆயினும் எழுதுகிறார். ஆனால் ஒரு மகிழ்ச்சி, சீனாவிலிருக்கிறது என்று தெரிவிக்க வந்தவர், 'நம்மைப் போல' என்கிற வார்த்தையையும் போட்டு, இங்கே குழப்பமும் கோளாறுகளும் உள்ளன என்பதை ஒப்புக்கொண்டிருக்கிறார்!

> சர்க்கார் நிர்வாகத்தில் கட்சியினர், தலையிடுகிறார்கள்.
>
> சேவை செய்து பழக்கப்பட்டவர்கள் ஆள்வோரானதால் திகைப்பும் அவசரமும் ஏற்படுகிறது.
>
> பொருளாதாரக் கஷ்டமும் அங்கே இருக்கிறது.

என்றார்! அதாவது, இவை யாவும் 'இங்கேயிருப்பதைப்போல' என்று கூறுவதில் ஒரு ஆனந்தம் தெரிந்திருக்கிறது, அவருக்கு!

இங்கே இந்தக் குறைகள் யாவும் உள்ளன.

ஆனால் பத்தாண்டு ஆட்சியில் அவையாவும் இல்லாமல் செய்துவிட்டோம் இங்கே.

இப்படி, பட்டியல் தந்தால், அது பெருமை! பாராட்டுக்கும் உரியதாகும்! ஆனால் நேருவுக்கு, யாரார் 'நம்மைப்போல' சீர்கேடுற்று இருக்கிறார்கள் என்பதில்தான் கவனம் செல்லுகிறது—அதை முதலமைச்சர்களுக்கு எடுத்துக் காட்டிடின் என்ன பிறக்கும்? கொஞ்சமாவது சுறுசுறுப்புக்கொள்ள வேண்டும் என்று கருதுகிறவரும், 'சரிதான்! அங்கேயும் இப்படித்தானாம்' என்று அலட்சியம் காட்டத்தான் செய்வர்! இதுவரை, சர்க்கார் கட்டிடத்தை வலம் வந்த காங்கிரஸ் கட்சிக்காரர் முன்னைவிட மூன்று மடங்கு வலம் வரத்தான் செய்வர்—ஏனெனில் அங்கேயே அப்படி என்று நேரு சொல்லிவிட்டாரே!

இதற்கு மட்டும் 'அங்கே அப்படி' என்கிறதை எடுத்து எழுதும் நேரு, வேறு எந்தக் காரியத்துக்கு 'அங்கே அப்படி' என்று ஒப்பிட்டுப் பார்க்க வந்தார்? எவ்வளவோ துறைகளில் செஞ்சீனம் முன்னேறியிருக்கிறது! நேருவின் கடிதக் கருத்து எப்படியோ—சீனா சென்று வந்தவர்களது உரைகளிலிருந்து பழைய சீனம் மாறி வருகிறது, என்பது தெரிகிறது. அண்மையில் போய்வந்த, கூட்டுறவுப் பண்ணைக் குழுவின் அறிக்கை, பலருக்கு சீனாவின் சாதனைகளை விளக்கும். அந்தச் சாதனைகளைச் சுட்டிக்காட்டி, அதுபோல் நீங்களும் இந்தியாவைச் செய்ய வேண்டும், என்று எழுதினால் அதில் ஆர்வம் தெரிகிறது — பொருளும் இருக்கிறது! அதற்குப் பதில், 'அங்கும் இப்படித்தான்' என்று நேரு எழுதக் காரணம் என்ன? "நான் மட்டும் என் தாயைப்போட்டு அடிக்கவில்லை. அதோ, அவனைப் பாருங்கள், அவனும்தான்" என்று ஒரு தனயன் கூறினால், எப்படியிருக்குமோ, அப்படியிருக்கிறது. தன் குற்றத்தை, சீனாவைக் காட்டி, சமாளிக்க முயல்கிறார்—மேயனும்படி முதலமைச்சர்களுக்கும் சொல்லித் தருகிறார் என்று கருதுவதில் தவறென்ன!!

★

ஊர்வலம்

—[ஞானக்கண்]—

தியாகம் செய்ய வேண்டும்! தியாகம் செய்ய வேண்டும்!! — என்கிற குரல் கேட்டது. இலங்கைக்குப் போய்க் கொண்டிருந்த நான், கொஞ்சம் கவனித்தேன். தூத்துக்குடிப் பகுதிகளில் சுற்றுப்பயணம் செய்த நமது முதலமைச்சர்தான், பள்ளிக்கூடத்தைத் திறந்து வைத்தபோதும், பாலத்தைத் திறந்து வைத்தபோதும் இப்படியே தியாகபோதனை செய்து கொண்டிருந்தார். "என்ன தியாகம் செய்யச் சொல்லுகிறீர்கள்?" என்று நேரே, அவரிடம் போய்க் கேட்டேன்.

"இது தெரியாதா! ஒவ்வொருவரும் அவரவர்கள் சக்தியானுசாரம் நாட்டின் எதிர்கால சுபீட்சத்தை எண்ணித் தியாகம்செய்யவேண்டும்" என்றார் முதலமைச்சர்.

"அது சரிங்க! கூழுக்கு உப்பில்லையே என்று ஒருத்தன் அழுகிறான்—அந்தக்கூழுக்கும்வழியில்லையேஎன்று இன்னொருத்தன் அலறுகிறான். ஓட்டைக் குடிசையில் விளக்கு இல்லையே என்று ஒருவனுக்கு ஏக்கம் — அந்த ஓட்டைக் குடிசைகூட எனக்கு இல்லையே என்று இன்னொருத்தனுக்கு துக்கம். இப்படியிருக்கிறவர்களிடம், என்ன தியாகத்தை எதிர்பார்க்கிறீர்கள்?"

"ஒவ்வொருவரும் கொஞ்சம், நாட்டுக்காகக் கொடுக்க வேண்டியது தான்..."

"என்ன உயிரையா?" என்று கொஞ்சம் கோபத்தோடு கேட்டுவிட்டேன். காமராஜர்தான் இப்போது எதற்கும் சிரிக்கக் கற்றுக்கொண்டிருக்கிறாரே! அதனால் பேசாமலிருந்தார்.

"ஏங்க! இப்படி ஏழை எளியதுகளை தியாகம் செய்யச் சொல்லுகிற நீங்க இப்ப என்ன தியாகம் செய்து கொண்டிருக்கீங்க..." இதைக் கேட்டதும் உண்மையிலேயே அவருக்குக் கோபம் வந்தது! அங்கிருந்து இலங்கைக்குப் பறந்தேன்!!

*

"அடடே, நம்ம 'தில்லை-வில்லாளன்' ம. பொ. சி. இவர்களெல்லாம் வரக்கூடாது என்று தடைபோட்டிருக்கிறார்களே, நம்மைப் பிடித்துக் கொண்டால்......" என்கிற பயம் சூழ்ந்தது. உடனே, நாம் 'ஞானக் கண்' என்கிற ஞாபகம் வரவே, நம்மை ஒன்றும்செய்யமுடியாது என்கிற தைரியத்துடன் நுழைந்தேன். யாழ்ப்பாணத்துக்குள், ஒரே கருப்புக் கொடி மயம்! வீடுகள் எல்லாவற்றிலும், கருப்புக்கொடிகள் பறந்தன—ஒவ்வொருவரும் கருப்புச் சின்னத்தோடு உலவிக்கொண்டிருந்தார்கள். இலங்கையின் வடக்கு, கிழக்குப் பகுதிகளில் வாழும் தமிழர் பகுதிகள் எல்லாம் இப்படியே காட்சி அளித்தது. ஒருவரைப் பார்த்து,

"இதென்ன! ஒரே கருப்பு..." என்றேன்.

'ஆமாம்! ஜூன் 5தேதி அல்லவா?' என்றார், அவர்.

"...5-ந் தேதி என்றால், அதற்காக ...ஏனிப்படி?"

"நீயார்?" என்பதுபோல் கொஞ்சம் முறைத்துப் பார்த்துவிட்டு,...... "போன ஆண்டு இதே 5-ந் தேதி தான் சிங்களம் மட்டுமே இலங்கையின் மொழி என்கிற சட்டத்தை பண்டாரநாயகாவின் சர்க்கார் செய்தது. அதை முன்னிட்டு இந்த நாளை துக்க நாளாக அனுபவிக்கிறோம்" என்றார்.

எனக்கும் துக்கம் வந்துவிடவே, அங்கிருந்து கிளம்பி ஆகஸ்டில் அறப்போர் நடத்த இருக்கிற பெடரல் கட்சியினரைச் சந்திக்கலாம் என்று கிளம்பினேன்.

*

ஒரே பரபரப்பு! ஆகஸ்டில் இலங்கைச் சர்க்காரின் போக்கைக் கண்டிக்க சாத்வீக அறப்போருக்கு ஆன ஆயத்தங்களைச் செய்துகொண்டிருந்தார்கள்!! என்னைக் கண்டதும், "நீ எந்த ஊரில் அமைப்பு வேலைகளில் ஈடுபட்டிருக்கிறாய்?" என்று கேட்கவே, நான் யார் என்று விளக்கினேன்.

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"ஒரு கேள்வி! நீங்கள் எதற்காக அறப்போர் துவங்க இருக்கிறீர்கள் என்பதைச் சொன்னால் தமிழ் நாட்டிலுள்ள உங்கள் சகோதரர்களுக்குப் போய்ச் சொல்லலாம் என்று ஆசை......"

"சரி! எங்கள் கோரிக்கை நான்கு. முதலாவது, தமிழ்ப் பிரதேசங்களுக்குச் சுய நிர்ணய உரிமையோடு கூடிய பெடரல் அரசியலமைப்பு வேண்டும்; இரண்டாவது, சிங்களம் மட்டும் அரசு மொழி என்பது கூடாது—தமிழுக்கும் இடமளிக்க வேண்டும்; மூன்றாவது, தமிழர்கள் வசிக்கிற இடங்களையெல்லாம் சிங்களவர்களைக் கொண்டு வந்து நிரப்புதல் கூடாது; நான்காவது இலங்கையில் வாழ விரும்பும் எல்லாத் தமிழர்களுக்கும் குடிமை உரிமை அளிக்கப்பட வேண்டும்... இதுதான் எங்கள் கோரிக்கை" அவர் இருந்த அவசரத்தைத் பார்த்து, அவருக்குச் சிரமம் கொடுக்கக் கூடாதெனக் கருதி கிளம்பினேன்.

வழியில் ஜனநாயகக் காங்கிரஸ் தலைவரான தொண்டமான் என்பவர் தென்பட்டார். அவரைக் கண்டதும்

"ஆகஸ்டுப் போராட்டம் பற்றி உங்கள் கருத்தென்ன?" என்றேன்.

"நானும் தமிழன்தானே..." என்று அவர், கொஞ்சம் நிறுத்தி, "நான் ஒரு யோசனை சொல்லியிருக்கிறேன். அதாவது, இன்னும் ஒரு ஆண்டுக்கு

கலை வளர!

கேரளக் கவிஞர் வள்ளத்தோல் செருத்துருத்தியில் நடத்தி வரும் கேரள கலாமண்டலம் இனிமேல் சர்க்காரின் பொறுப்பிலிருக்கும். கேரள நாட்டியக் கலைக்காகப் பாடுபடும் இக்கலைக்கழகம், தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தில் இதுநாள் வரையிருந்தது. இப்போது சர்க்காரே ஏற்றுக் கொண்டதால் முன்னைவிட அதிகம் பேர் கலைபயிலும் வாய்ப்பும், கலைக் கூட்டம் வளரும் சந்தர்ப்பமும் அதிகமாகலாமென நம்பப்படுகிறது.

சிங்களம்மட்டும் என்கிறதை சர்க்கார் நிறுத்திவைப்பது; அதேபோல, ஆகஸ்டுப் போராட்டத்தையும் ஒரு ஆண்டுக்குத் தள்ளிவைப்பது. பிறகு, பார்த்துக்கொள்ளலாம் என்பதுதான், அது.''

''தமிழர்கள், எப்போதும், அன்புக்கு அடிபணிவார்கள்! ஆனால், பண்டாரநாயகா......'' என்றேன். எனக்கும் அதுதான் புரியவில்லை—என்று தலையாட்டிவிட்டுப்போகவே, எங்கு போகலாம் என்று யோசித்துக்கொண்டே நின்றேன். இலங்கை அரசியலில் பேர்போன சேனநாயகா ஞாபகம் வரவே, அங்கு கிளம்பினேன்.

புராதனப் பெயரை மாற்றலாமா?—என்றுதான் சிலர்கூறி வந்தனர். எனினும் கேரள சர்க்கார் சட்டம் கொண்டு வந்து, இதோ மாற்றவிருக்கிறார்கள். திருவாங்கூர் பல்கலைக் கழகம், இனிமேற்பட கேரள பல்கலைக் கழகமாக அழைக்கப்படும்! அதைப்போலவே, மைசூர் காங்கிரஸ் கமிட்டியும் ஆலோசனையில் ஆழ்ந்திருக்கிறது, இதுவரை 'மைசூர்' என்றிருந்தபெயரை கர்நாடகம் என மாற்றிவிடலாமா, என்று! இப்படி ஆங்காங்கே உள்ளவர்கள், தமது காரியங்களைச் செய்துகொள்கின்றனர். ஆனால் இங்கோ? தமிழ்நாடு—என்று பெயர் மாற்ற மனமும் இல்லை! டில்லி என்ன சொல்லுமோ என்றும் அஞ்சுகிறார்கள்!!

✻

உல்லாசமாக இருந்தார் முன்னாள் பிரதமரான அவர்! என்னைக் கண்டதும், ''யார்?'' என்றார். விளக்கியதும், ''என்யோசனை இதுதான். இருதரப்பாரும் ஒரு வட்டமேஜை மாநாடு கூட்டி அங்கே மனம்விட்டு, இருதரப்புப் பிரச்னைகளையும் பேசவேண்டும், என்பதுதான். அப்படியே நான் அறிக்கைவிடப்போகிறேன்'' என்றார். அவர் கருத்தைத் தெரிந்துகொண்டதும், நேரே ஊருக்குக் கிளம்பலாம் என்று புறப்பட்டபோது, ''சமாதானம் ஓங்குக! உலக சமாதானம் ஓங்குக!'' என்கிற முழக்கம் கேட்டது. நாம் எங்கேயிருக்கிறோம் என்று கண்ணைக் கசக்கிவிட்டுக்கொண்டு பார்த்தேன்.

கொழும்புதான்; சந்தேகமில்லை! தமிழர்களுக்கு நீதி வழங்க மறுக்கும் அந்தத் தரணியிலேதான் உலக சமாதானக் கவுன்சிலின் மகாநாடு நடந்துகொண்டிருந்தது—ஆகா, எவ்வளவு பொருத்தம், என்று கூறிக்கொண்டே 'இனியும் இங்கிருக்கலாகாது' எனக் கிளம்பினேன்.

✻

கேரளத்துப்பக்கம் வந்துகொண்டிருந்தபோது, ஒரு குரல் கேட்டது ''...அப்படி இலங்கையிலிருந்து நம்மவர்கள் வெளியேற்றி அனுப்பப்பட்டால் அவர்களுக்கு வேண்டிய வசதிகளைச்செய்து கொடுக்கும் பொறுப்பு சர்க்காருக்கு இருக்கிறது.''

திகைப்பாயிருந்தது! யார் அது? எங்கேயிருக்கிறோம்!! இவ்வளவு தைரியமாக, யார் காமராஜா பேசுவது, என்று பார்த்தேன். அல்ல, அல்ல, புதுக்களிப்பில், கேரளத்து கம்யூனிஸ்டு நிதி மந்திரி சட்டசபையில் முழங்கிக்கொண்டிருந்தார்! தைரியம்.— பேசச்சொல்கிறது, என்று எண்ணிக்கொண்டே இங்கு வந்து சேர்ந்தேன்!!

★

பெருமை இழக்கவில்லை!

''குறள் வாழ்க! அதைப்போற்றும் நாடுகள் வாழ்க!!'' என்று பெருமிதத்தோடு பேரறிஞர் ஆல்பர்ட் ஸ்வீட்சர், இலங்கையிலுள்ள தமிழ்ப் புலவர் கே. பி. ரத்னத்துக்கு எழுதியிருக்கிறார். தமிழ்மறைக் கழகத்தின் 5-வது ஆண்டு குறள் மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு விடுத்த அழைப்புக்கே, அவர் இவ்வண்ணம் பதிலளித்துள்ளார்:

''இந்தியாவின் கருத்து வளர்ச்சி'' என்கிற என்னுடைய நூலில் நான் குறளைப் பற்றிக்கூறிய கருத்துக்களைப் படித்ததால் ஏற்பட்ட மகிழ்ச்சியைக் கேட்க நான் ஆனந்தப்படுகிறேன். நான் திருக்குறளை முதன் முதலில் படித்தபோது, அதிலுள்ள கருத்துக்களைக் கண்டு, பரவசமானேன். இது ஒரு சிறந்த நீதிநூல். ஐரோப்பிய மக்களில் பலரை, இதைப் படிக்குமாறு செய்தேன். அவர்களும், படித்துணர்ந்து பரவசப்பட்டார்கள். இரண்டாவது உலகப்போர் மட்டும் மூளாதிருக்குமானால், குறள் தந்த தென்னிந்தியா நம் காலத்தில் எப்படியிருக்கிறது என்று பார்க்க வந்திருப்பேன். ஆனால் 1937-முதல் 1948-வரை லாபரேனியாவிலுள்ள எனது ஆஸ்பத்திரியைக் கவனிக்க நேர்ந்தது. பிறகும் ஒரு பெரிய பிரயாணம் செய்யுமளவுக்கு எனக்கு ஓய்வில்லை. ஆனால், உங்க[illegible] மூலம் குறளின் பெருமை குன்றவில்லை என்று அறிகிறேன். இப்படியே இருக்கட்டும்!!''

✻

ஜூன் 11-ந் தேதி வந்த கடிதம் இது! படிக்கும்போது, இனிக்கிறது, நமக்கு! எவ்வளவு பெரிய நீதிநூல், அருமறை. கிடைக்காத களஞ்சியத்துக்குப் பாதுகாவலர் நாம் என்கிற பெருமையும் பூரிப்பும் உருவாகிறது; இருந்தும் என்ன பலன்! கண்ணிரண்டும் விற்றுச் சித்திரம் வாங்கும் நிலையில்தானே உள்ளோம்—கட்டாய இந்திக்குத் தலைவணங்கிவிட்டு பெருமூச்சுவிடும் நிலையில்தானே உள்ளோம்! எவரெவர் உருவங்களையெல்லாமோ தபால் ஸ்டாம்புகளில் போட்டது டில்லி—திருவள்ளுவர் உருவை ஒருமுறை, ஒரே ஒரு தடவை போட விரும்பிற்றா? 'ஏன் போடவில்லை' என்று தமிழ் மக்கள் கேட்டனர்! அதற்கு டில்லி, வழங்கிய பதில், தபால்—மணியார்டர் — எல்லாவற்றையுமே இந்தி, ஆக்கிவிட்டது!!

அவர்கள் செயல்

போலீஸ் பாரா காத்து நிற்க, மெருகு குலையாத காரில், அதிகாரிகள் புடைசூழ, ஆனந்தமாகச் சென்றார் அவர்! ஏனெனில், அவருக்கு 'வரவேற்பு' இருந்தது!

அலங்காரங்கள், விருந்து வைபவம், விதவிதமான மாலைகள் அத்தனையும் மண்டபத்துக்குள்ளே இருந்தன! வெளியிலேயோ, மக்கள் நின்றார்கள்—கருப்புக் கொடியும் கடுகடுத்த முகமும் கொண்டவர்களாக!

மண்டபத்துக்கும், மக்கள் நின்ற தூரத்துக்கும் இடைவெளி கொஞ்சம்தான், ஆனால் அதைத் தாண்டி, அவர் செல்வதற்குள், மக்கள் எழுப்பியமுழக்கம் அவரை சிந்திக்க வைத்துவிட்டது. உள்ளே விருந்து—பாராட்டு—மலர்மாலை, எல்லாம் நடந்தது, நடத்தியோர், அமைச்சரின் புன்னகை நமக்குக் கிடைத்துவிட்டது—நாளைக்கு டில்லிக்கு ஒரு காரியமாகச் சென்றால் நிச்சயம் அவர் 'கருணை' கிடைக்கும் — இப்படித் தான்எண்ணிக்கொண்டிருந்திருப்பர்! அமைச்சருக்கோ, விருந்து ருசிக்கவில்லை — மக்கள் தான் அவர் நுழையும்போதே மருந்து கொடுத்துவிட்டார்களே!

* * *

"அழகான முத்து!"

"ஆம், ஆம். எனக்கு அதைப் பார்க்கும் பொழுது உழைப்பாளியின் உடலிலே கொப்பளிக்கும், வியர்வைத் துளிதான் கவனத்துக்கு வருகிறது."

"தங்கத்திலே செய்த சங்கிலி!"

"பளிச்சென்று மின்னுகிறது. ஆனால், இதைத் தோண்டி எடுக்கிறானே ஏழை, அவன் ஏறி இறங்கும் சுரங்கத்துக்குள் திடீரென வெடி ஏற்படும்போது விளக்கு மின்னி மறையுமே, அதுதான் கவனத்துக்கு வருகிறது."

"சரி! சரி! இந்த மாதுளை...?"

"அதன் செந்நிறம், தோட்டத்தில் ஏழை விவசாயி, எவ்வளவு இரத்தம் சிந்தியிருப்பான் என்கிற எண்ணத்தையே உண்டாக்குகிறது."

* * *

இப்படி ஒவ்வொன்றுக்கும் விளக்கம் தந்துகொண்டிருந்தால் முத்தையும் தங்கத்தையும் — ஏன்?—சீமான் தரும் மாதுளையையும் வாங்கி அனுபவிக்க இயலுமோ, எவராலும்! என்னதான் மந்திரியாக இருந்தாலும், மரக் கட்டையில்லையல்லவா? அதனால் தான், மண்டபத்துக்குள் நுழைந்து, மலர் மாலையும் விருந்துபசாரமும் பெற்றபோது கூட, கவனம், மண்டபத்துக்கு வெளியேதான் இருந்திருக்கிறது; விருந்தும் உபசரிப்பும் அவருக்கு ஆனந்தத்தை வழங்கவில்லை—பதிலாகப் பெருமூச்சை உண்டாக்கியிருக்கிறது!

கடந்த 9-ந் தேதியன்று டில்லி மந்திரி **சர்தார் சுவரண் சிங்**, பஞ்சாபிலுள்ள ஜலந்தர் நகரில் ஒரு வரவேற்புக்குச் சென்றபோதுதான், இப்படிச் சிந்திக்க வேண்டிய சிக்க
லான நிலைக்கு ஆளானார். மண்ட
பத்துக்கு வெளியே குழுமியிருந்த
மக்கள் அவரது கையைப் பிடித்
திழுக்கவில்லை-போகாதீர்! போகா
தீர்! என்று தடுக்கவில்லை.

**"அமைச்சரே, அழகா இது? ஆயிர
மாயிரம் மக்கள் ஆங்காங்கும் பசி பசி
என்று கண்ணீரும் கம்பலையுமாய் கதறு
கின்றார்களே! கண்ணில்லையோ, உமக்கு
அக்காட்சியைக்காண? அதைக் கண்டுமா
உமக்கு ஆடம்பரம் தேவைப்படுகிறது!
விருந்து அருந்த மனம் ஒப்புகிறது! வரி,
வரி என்று வாங்குகிறீர்கள் — கேட்டால்
ஐந்தாண்டுத் திட்டத்துக்குப் பணமில்லை
என்கிறீர்கள் — ஆனால், பணம் இப்படி
வரவேற்புக்கும் விருந்துக்கும் பாழாக
லாமா? வேலியே பயிரை மேயலாமா
மந்திரிகளான நீங்களே, முன் உதாரண
மாக அமைந்தாலன்றோ சிக்கனம் ஏற்
படும்? ஏழைகளைப்பற்றிய சிந்தனையா
வது உண்டாக வழி கிடைக்கும்?"**

இவ்வண்ணம் முழக்கம் எழுப்பி
யிருக்கின்றனர். கேட்டுகொண்டே
உள்ளே சென்ற அமைச்சரின்
மனமெல்லாம் குழம்பியிருக்கிறது
பாதாமும் பாலும், எப்படி ருசிக்
கும்? முல்லையும் ரோஜாவும்
களிப்பா தந்திருக்கும்? அதனால்
பெருமூச்சோடு, **"அவர்கள் செய்தது
நல்ல காரியம்தான்"** என்று வெளி
யிட்டிருக்கிறார். அமைச்சரின்
பெருமூச்சையும் கவலைக் குறியை
யும் கண்ட, விருந்தளித்த பிரமு
கள், என்ன ஆயாசப்பட்டனரோ
அறியோம்; ஆனால் அமைச்சர்
மக்கள் தம் முழக்கம் கேட்டு மன
அதிர்ச்சி பெற்றுப் பெருமூச்
கலக்க, "அவர்கள்செய்தது நல்ல
காரியம்தான்" என்று செப்பி
அதே சமயத்தில், வெளியே சில

வெகுண்டெழுந்து, உரிமை கோரிய மக்கள் மீது பாய்ந்து, அடி! பிடி! தாக்கு! குத்து என்று சண்டை செய்திருக்கிறார்கள், விருந்து வைத்த சீமான்களின் எடுபிடிகளல்ல, அமைச்சருக்கு அறிவுரை தந்தோரைத் தாக்கியோர்! அமைச்சருக்குக் காவல் வந்த போலீசாருமல்ல! **காங்கிரஸ் காரர்கள்**—ஆம், காங்கிரஸ்காரர்களுக்குத்தான், மக்கள் இவ்வாறு செய்தது பிடிக்கவில்லை. கூடிநின்று, "மந்திரிகளே! செலவைக் குறையுங்கள், ஆடம்பரங்களை அகற்றுங்கள், அநியாய வரிகளை ஒழியுங்கள்" என்று முழக்கம் எழுப்பிய மக்களிடையே புகுந்து கலாம் விளைவித்து, ஒருவருக்குப் படுகாயமும் உண்டாக்கியிருக்கிறார்கள்.

மக்கள்செய்தது, சரிதான்!—என்று அமைச்சரே, மனம் ஒப்பி, வெளியிட்டிருக்கிறார். இப்படி, அநாவசியமான விருந்துகளில். நாடு பசியாலும் பட்டினியாலும் திண்டாடும்போது, தான் ஈடுபாடு கொள்ளக்கூடாது என்பதை உணருகிறார். அதை உரைக்கவும் செய்திருக்கிறார்! ஆனால், மக்களுக்காகப் பாடுபடுவதாகக் கூறும் **காங்கிரஸ்** கட்சியினருக்கு மக்களின் கண்டனம் பிடிக்கவில்லை—மக்கள் மீது விழுந்த அவர்தம் குரலை, தமது பலாத்காரத்தால் ஒடுக்க முனைந்திருக்கின்றனர்.

*

"சர்க்கரை—கசப்பு!"

"ஆமாமாம், கசப்பு என்று சொல்லு! ஏனெனில், நமது காங்கிரசே, சொல்லிவிட்டது!!"

"வேப்பு, இனிக்கும்"

"ஒவ்வொரு வீட்டிலும், மகா ஜனங்களே, காலையில் காப்பியில் ஒருபிடி வேப்பிலையை அரைத்துப் போட்டுக் குடியுங்கள், ஆனந்தமாக இருக்கும்"

*

இந்த மனோபாவத்தை யாரும், ஒப்பார்! ஆனால், காங்கிரஸ்காரர் என்று சொல்லிக்கொள்வோரிடம் இந்த மனோபாவம், இருப்பதை எல்லோரும் காணலாம். ஊரில் ஒரு தீயகாரியம் என்றால், அதைத் தடுக்கவும் கண்டிக்கவும், மாற்றுக் கட்சிகள் அனைத்தும் முன்வரும். ஆனால், காங்கிரஸ்காரர்களோ, நடப்பது தமது ஆட்சியென்பதால், 'சர்க்கரை கசக்கும்' என்று சொல்வதே தமது கடமையெனக் கருதுவர்--கண்டிப்போரை எதிர்ப்பர்—வலிவுள்ள இடங்களில், 'ஜலந்தர்' ஏற்படச் செய்வர். இதனையே இன்று நேற்றல்ல, இந்தப் பத்தாண்டுக்காலமாகத் தொடர்ந்து செய்துவருகின்றனர்.

இந்தப் போக்கு ஆகாது—அரசின் தவறுகளை எடுத்துரைக்க அஞ்சக்கூடாது—மக்கள் என்ன கருதுகிறார்கள் என்பதை காங்கிரஸ் காரர்கள் எடுத்துரைக்கவேண்டும்—என்று, அண்மையில், அவர்கள் போற்றும் நேரு பண்டிதர் அவர்களே எடுத்துரைத்தார், அ. இ. கா. கமிட்டியில்! இப்படிக் கண்ணை மூடிக்கொண்டு, மக்களை மறந்து எல்லா விஷயங்களுக்கும் 'ஆமாம்' போடுவதால்தான், காங்கிரஸ் செல்லாக் காசாகி வருகிறது, என்றும் சலித்துக்கொண்டார்!

இதோ, 'ஜலந்தர்' தென்படுகிறது--காங்கிரஸ்காரர்கள் 'போலீசார்' ஆகிறார்கள் — அமைச்சர், ஒப்புக்கொள்கிறார் — எனினும் இவர்களால் மாற்றுக் கட்சியின் மீது எழும் மன எரிச்சலை அடக்கிக் கொள்ள இயலவில்லை, "விருந்து சாப்பிட்டால் என்ன? ஆடம்பரமாகப் பவனிவந்தால் என்ன! அதிகச் சம்பளம் வாங்கினால் என்ன!" என்று வாதாடவோ, இயலாது. ஆகவே, எரிச்சல் குடைய, எதிர்க்கட்சிகள்மீது பாய்ந்திருக்கின்றனர்.

*

அரசியல் கட்சிகள், மக்களுக்குச் சேவைசெய்வதற்காகத்தான். மக்களுக்குத்தான் கட்சிகளே ஒழிய, கட்சிகளுக்காக மக்கள் அல்ல! இந்த உண்மையை, 'ஜலந்தர்' காங்கிரசார் மட்டுமா, இங்கேயிருப்போர் கூடத்தான் எண்ணுவதில்லை. எண்ணியிருந்தால், இங்கேயிருக்கும் எல்லா எதிர்க்கட்சிகளும் கூடி கிருஷ்ணமாச்சாரியாரின் புது வரிகளைக் கண்டித்தபோது, காங்கிரசார் மட்டும் கச்சையை வரிந்துகொண்டு, "வரி அவசியம்! இது ஒன்றும் ஏழையைப் பாதிக்காது!" என்று 'ஆதரவு நாள்' நடத்தக்கிளம்புவார்களா? **வரிச்சுமை தாங்கமுடியவில்லை!** —என்று கூறிய நமக்குப் பதில் கூறத்தான் முனைவார்களா? மத்தியதர மக்களுக்குத் தெரிகிறது, டி. டி. கே-யின் ஒவ்வொரு வரியும் தங்களைத் தாக்கும் என்பது! அதனை, காங்கிரஸ் எடுத்துச் சொல்ல அஞ்சுகிறது, 'டில்லி கட்டுப்பாடு' காரணமாக! நாம் எடுத்துக் கூறுகிறோம், கட்டுப்பட வேண்டிய அவசியம் இல்லையாதலால்! அப்படி நாம் சொல்லும்போது எங்கே, மக்கள் காங்கிரசைக் கண்டிப்பார்களோ என்கிற பயம் காங்கிரஸ் தலைவர்களைக் குடைய ஆரம்பிக்கவே, ஆத்திரம் அதிகமான இடங்களில், 'ஜலந்தர்' செய்கிறார்கள் — பிற இடங்களில் எதிர்க்கட்சிகளைத் திட்ட

ஆரம்பிக்கிறார்கள். ஏன், இது! காதில் தேளை, விட்டுக்கொள்வானேன் — பிறகு, குத்துகிறது, குடைகிறது என்று கூறுவானேன்? ஆள்வோர், இவர்கள் சகாக்கள்தானே! அவர்களிடம் சொல்லி, மக்கள் கண்டிக்காத அளவுக்கு நடந்துகொள்ளச் சொல்லக் கூடாதா? இருக்கின்ற மந்திரிகள் எல்லாம் அலாகாபாத்தில் காலை விருந்தும், மத்தியானம் மயிலாப்பூரிலும், டிபனுக்குப் பம்பாயும், இரவு உணவுக்கு கல்கத்தாவுமாக வாழ்ந்தவர்களா? ஏன் சொல்லக்கூடாது! ஏன் அநாவசியமான செலவினங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் குறைத்துக்கொள்ளக் கூடாது.

எவ்வளவு போலீஸ் பாரா.

எங்கெங்கு வரவேற்பு.

எதெதெற்கு ஊர்ப்பயணம்.

இந்தப் பத்து ஆண்டுகளில், காங்கிரஸ் மந்திரிகள் செய்திருக்கும் செலவுகளுக்குக் கணக்கு வழக்கு உண்டா? சர்தார் சுவரண் சிங், சீக்கியர்! சென்ற இடமும் சீக்கியர் வாழ் திருத்தலம்! என்ன எண்ணியோ என்னவோ, "அவர்கள் செய்தது சரிதான்" என்று மக்கள் தம் முழக்கத்தை அலட்சியம் செய்யாமல், பெருமூச்சுக் கலந்தாலும் ஏற்றுக்கொண்டிருக்கிறார். ஆனால், மேலே குறிப்பிட்டபடி இடித்துரைத்தபோது எடுத்துக்கொண்ட மந்திரிகள் யார்? கடந்த பத்து ஆண்டுகளில், ஒருவருமே, கிடையாதே!

ஜனாதிபதி வீட்டுக்கு யானை வேண்டும். அதற்கு தீனிபோட வேண்டும். கவர்னர் எவ்வளவு வேண்டுமானாலும், விருந்துக்குச் செலவழிக்கலாம்.

அந்தந்தப் பதவிகளுக்கு அப்படி அப்படி அந்தஸ்து அளிக்கத்தான் வேண்டும்.

என்று, நேருவே அல்லவோ வாதாடி வந்தார், இதுநாள்வரை. அவர் கூறுகிறார் என்பதால் காங்கிரசிலுள்ள ஒவ்வொருவரும், இந்தச் செலவுகள் யாவும் அவசியம் என்று கருதினரே ஒழிய, கண்டிக்க முன்வந்தது யார்? ஜலந்தரில், கம்யூனிஸ்டுகள் — அகாலியர் — தாழ்த்தப்பட்டோர் சம்மேளனத்தார் — ஜனசங்கம் — ஆகிய எல்லாக் கட்சிகளும் கூடிக் கண்டித்தது. அமைச்சர் 'ஆமாம்! ஆமாம்! சரிதான்' என்கிறார். அது போலவே, நேருவின் ஆட்சியில் நடைபெறும் அநாவசியச் செலவுகளையும், "இப்படிச் செலவு ஆகும் போது ஏன் அதிகவரி?" என்கிற விபரங்களையும், எதிர்க்கட்சிகள் கேட்கிற காரணத்தால், இப்போது, தாக்கீது அனுப்பியிருக்கிறாராம்.

ஒவ்வொரு மந்திரிகளும் ஆடம்பரப்படுத்திக்கொள்ளக் கூடாது. அதிகமான வரவேற்புப் பவனிகளை வைத்துக்கொள்ளக்கூடாது.

எல்லா விஷயத்திலும் சிக்கனமாயிருக்கவேண்டும்.

என்பதாக! மகிழ்கிறோம்—ஆனால் ...! இன்று பிறக்கும் இந்த உத்தரவு பத்து ஆண்டுகளுக்கு முன்பே பிறந்திருந்தால்......? இதோ ஒரு சேதி:

அண்மையில் காலஞ் சென்றுவிட்ட ஒருகாங்கிரஸ் முதலமைச்சருடைய, சொத்து என்ன என்று கணக்கிட்டபோது 90-லட்சம் இருந்ததாம்!

90-லட்சம்! அவருக்குத்தாயாதிகள் மூலமோ, அல்லது தொழில் மூலமோ இவ்வளவு வருமானம் வர வழியே கிடையாதாம்? எப்படி வந்தது, இவ்வளவு இலட்சங்களும்!

நமக்கு சந்தேகம் உண்டாவது போலவே, பார்லிமெண்டிலும் பலருக்கு ஏற்பட்டிருக்கிறது.

இதோ, மைசூர் சட்டசபைக்கு ஒரு உறுப்பினர் தீர்மானமே அனுப்புகிறார்,

"பதவியிலிருக்கிற, பதவியிலிருந்து விலகிய ஒவ்வொருவருடைய உண்மையான பழைய—புதிய சொத்து விபரங்களைச் சேகரிக்க வேண்டும்"

என்பதாக! இதெல்லாம், எதைக் காட்டுகின்றது? இன்று உத்தரவு பிறப்பிக்கும் நேரு, பத்து ஆண்டுகளுக்கு முன்பு, எதிர்க்கட்சிகள் எல்லாம் சொல்லியநாட்களிலேயே செலவினங்களில் சிக்கனத்தைக் கடைப்பிடித்திருந்தால், நாட்டுக்கு இவ்வளவு தொல்லையிருந்திருக்காது? எவ்வளவு வரிப்பணம் மிச்சமாயிருக்கக்கூடும்?

நினைக்க நெஞ்சு வேகிறது! இதை, சொல்லிப் பாருங்கள் ஒரு காங்கிரஸ்காரரிடம் — எரிச்சல் கொள்வார்—'ஜலந்தர்' செய்வேன் என்பார்—ஏனெனில், இப்போது உண்மைக்கு தலைகுனியும் காங்கிரஸ்காரர்கள்தான் அங்கே இல்லையே!!

பார்லிமெண்டுக்கு வந்திருக்கும் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஈ. வி. கே. சம்பத், தர்மலிங்கம் என்னும் இரண்டு உறுப்பினர்களும் சபையிலுள்ள எல்லாப் பகுதியினரின் கவனத்தையும் கவர்ந்தார்கள். இருவரில் ஒருவரான ஈ. வி. கே. சம்பத், பட்ஜட்பற்றிய பொதுவிவாதத்தின் போதாவது பங்கெடுத்துக்கொள்வார் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், ஏராளமானோர் பேச நேர்ந்ததால், அவருக்குச் சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. இதுபற்றி அவர், சபைத்தலைவருக்குப் புகார் செய்தார். பார்லிமெண்டின் அடுத்த கூட்டத்தின்போது, அவருடைய கட்சியின் கருத்துக்களைத் தெரிவிக்க சந்தர்ப்பங்கள் அளிக்கப்படுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

"மெயில்" ஏட்டில் 'பெரிட்டினாக்ஸ்' தீட்டியுள்ளார் இவ்விதம்.

அகிலம் பேசுவோர் கவனத்திற்கு

"ஐயகோ! இது ஆ கு மா, தகுமா, நமக்கு உதவுமா?"

"இந்திய ஒற்றுமைக்கே வெடிவைக்கிறார்களே, இவர்கள்!"

"த னி நா டா மே!—மனந்துணிந்து கூறுகிறார்களய்யா, என்ன அக்கிரமம்! என்ன அக்கிரமம்!"

"பேதம் விரும்பிகள்! பிரிவினைத் துவேஷிகள்!!"

மராட்டிய மாநிலத்து பிரஜா சோஷியலிஸ்டு கட்சி, இவ்வண்ணம் அவலக் குரல் எழுப்பி அறிக்கையொன்று வெளியிட்டிருக்கிறது! திராவிட முன்னேற்றக் கழகத்தின்பால் திடீரென்று எங்கோ இருக்கும் அக் கட்சிக்குக் கவனமும் கருத்தும் வருவானேன் என்று கேட்கத்தோன்றும்; ஆனால், இந்த ஓலக் குரலுக்குக் காரணம், நாமல்ல! மராட்டியசமிதி!!

மராட்டியருக்குத் தனி மாநிலம் வேண்டும்—பம்பாய் அதன் தலைநகரமாயிருக்கவேண்டும் என்று கோரி, உருவானதுதான் 'மராட்டிய சமிதி' இதிலே, காங்கிரசிலிருந்து விலகியவர்கள், கம்யூனிஸ்டுகள், கோல்வால்கர் கட்சியினர், பிரஜா சோஷியலிஸ்டுகள், சோஷியலிஸ்டுகள் அனைவரும் உள்ளனர். இப்படியொரு கூட்டு சேர்ந்ததால், அண்மையில் நடைபெற்ற பொதுத்தேர்தலில் அபரிமித வெற்றியும் பெற்றார்கள்! இந்தியாவிலேயே அதிக 'ஓட்' வாங்கியவர் என்கிற பெருமைக்கு கம்யூனிஸ்டு கட்சித் தோழர் டாங்கேயை ஆளாக்கியது இந்த சமிதி தான்! அதைத்தான், மராட்டிய மண்டலத்து பிரஜா சோஷியலிஸ்டு கட்சி கண்டிக்கிறது.

"பம்பாய் வேண்டாம்! மராட்டிய மாநிலம் வேண்டாம! தேர்தலோடு இந்த முழக்கங்களை மறந்துவிட்டோம்" என்று சொல்லி, மராட்டிய சமிதி, வேறு வேலைக்குப் போய்விடவில்லை. எனினும், 'பி. சோ' கண்டிக்கிறது இதில்ஆச்சரியத்துக்குரியது என்னவென்றால், அந்த சமிதியில் இன்னும் இந்த 'பி. சோ.' ஒரு அங்கமாகவே உள்ளது — எனினும் கண்டிக்கிறது! ஓலக் குரல் எழுப்புகிறது!!

மராட்டியம், ஒரு தனி நாடு!

என்று கூற ஆரம்பித்திருக்கிறதாம், சமிதி. நாங்கள் ஒரு தனி மொழியினர் — எங்கள் வரலாறு தனி மகிமை பொருந்தியது— நாங்கள் ஒரு தனி நாடாக வாழக் கூடியவர்கள் என்று மராட்டிய சமிதி, கருத்துத் தெரிவித்துள்ளதாம்.

மராட்டியத்தில். 'தி. மு. க.' கிடையாது! இன்னும் கூற வேண்டுமானால், தனிநாடு கோரிக்கையை மறுக்கும் டாங்கே, சமிதியின் தலைவர்!! அந்தச் சமிதி, இவ்வண்ணம் அறிக்கை விட்டிருக்கிறதாம்.

மொழிவாரி மாநிலம் கேட்டது —டில்லி மறுத்தது—பம்பாயைக் கேட்டது — டில்லி குட்டையைக் குழப்பியது — 'ஆத்திரமடைந்த மராட்டியர் தம் தலைவர்கள் இப்போது இப்படிப் பேச ஆரம்பித்திருக்கிறார்கள்— "மராட்டியம் தனித்தே வாழும்! அதற்கான எல்லா அம்சங்களும் எங்களிடம் இருக்கின்றன. இன்னொருவருடைய ஆதீனத்தில் இருக்க வேண்டுமென்கிற கட்டாயம் எங்களுக்கு என்ன?" என்று.

இந்தக் குமுறல் எங்கேகொண்டு போயவிடுமோ, என்று 'பி. சோ.' அஞ்சுகிறது! அகில இந்தியா சிதறிவிட்டால் என்ன ஆகும் என்று ஓலக் குரல் எழுப்புகிறது!

மராட்டியத்தில் டில்லி ஆதிக்கத்தின் மீது ஏற்பட்டிருக்கும் ஆத்திரமும், அதனால் இவர்களுக்கென்ன நாம் பணிந்துகிடப்பது என்று அரும்பி வரும் தனிநாடு வேட்கையும எந்தளவுக்கு உருவாகியுள்ளது, தெரியுமா?

இந்தியா, பல நாடுகள் அடங்கிய, 'காமன் வெல்தாக' இருக்கலாம்!

எப்படி யோசனை? பல நாடுகள் கொண்ட காமன் வெல்தாக இருக்கலாம் என்று கூறுகிற அளவுக்கு அங்கே கருத்தலைகள் கிளம்பியுள்ளனவாம். 'பி. சோ.' தனது அறிக்கையில், "இந்தியா பல நாடுகளடங்கிய காமன்வெல்த் அல்ல, பிரிக்கப்பட முடியாத ஒரே நாடு என்று எத்தனை, தடவை சமிதி எடுத்துச்சொல்லியிருக்கிறது? இப்போது இவ்விதம் எல்லாம் பேசலாமா!!" என்று கேட்கிறது. சமிதி, தனிநாடு கோரவில்லை முன்பு! ஆனால், டில்லியின் போக்கு அதன் தலைவர்களை, அந்தளவுக்கு விரட்டி வருகிறது!!

"தேசம் என்றால், இந்தியா என்று நினைப்பது, பிறகு.

'வாலிபனாக இருந்தபோது நான் செய்கின்ற பத்து வேலைகளில் ஒன்பது தோல்வி அடைவதை உணர்ந்தேன். எனக்கு தோல்வி பிடிப்பதில்லை. அதனால் பிறகு முன்னைவிட பத்து மடங்கு அதிகமாக வேலைசெய்ய ஆரம்பித்து விட்டேன்.

—பெர்னாட்ஷா.

முதலில் நமது மொழி பேசும் இடம்தான், நமது தேசம்!"

இப்படியும் பேசுகிருர்களாம் சமிதியின் தலைவர்கள் — இதைக் குறிப்பிட்டு, 'பி. சோ' — பாரீர், பாரீர்! இந்திய யூனியனுக்கே வேட்டுவைக்கக் கிளம்பிவிட்டார்கள் சமிதியின் தலைவர்கள்? மராட்டியம் பேசுகின்ற இடம்தானே, முக்கியமாம்! அதுதான், தேசமாம்—பிறகுதான் இந்தியாவைப் பற்றி நினைப்பார்களாம். என்னே! என்று, பதறுகிருர்கள்.

பி. சோ. கருதுவதுபோல' பிரிவினைக் கீதம் பாடிட தோள் தட்டிக் கிளம்பிடும் என்று கருதுவதற்கில்லை. டில்லி வஞ்சிக்கிறதே எனும் ஆத்திரத்தின் காரணமாக சமிதியின் தலைவர்கள் இவ்விதம் பேசினாலும், நம் அளவுக்கு அங்கும் சுதந்திரதாகம் முகிழ்க்கும் என்று இவ்வளவு விரைவில் கணக்கிடநாம் தயாரில்லை. ஆனால்

சந்தர்ப்பம் வரும்போது அங்கும் எழுகிறது, பிரிவினை கீதம்!

இதனையே 'அகில இந்தியா'வுக்கு வாதாடும் தோழர்கள் எண்ணிப் பார்க்க வேண்டும். அடக்கியொடுக்கி எவ்வளவுதான் மூடிவைத்திடினும், 'நாங்கள் தனி!' என்கிற எண்ணம், இந்திய உப கண்டத்திலிருக்கும் எந்தப் பகுதி மக்களுக்கும் எழாமலில்லை. இந்த எண்ணம் ஒரு சமயத்தில், பெரிதாகாமறபோகும் என்பது என்ன நிச்சயம்! இன்று ஒரு பண்டித நேரு, 'உலகம் போற்றும்' தலைவராக இருப்பதால், அவர் ஆட்சியின் கீழிருப்பதுபெருமையென்று ஒரு எண்ணம் பலருக்கு இருக்கிறது! இது, எத்தனை நாளைக்கு நீடிக்க முடியும்? இன்றில்லாவிடினும் நாளை, நாளையில்லாவிடினும் இன்னும் கொஞ்சக்கால்த்துக்குப் பிறகு, தனி உணர்ச்சி எழாமலா போகும்? எப்போது, பார்லிமெண்டிலிருக்கும் காங்கிரஸ் உறுப்பினர்களே, நாங்கள் இந்தியில் விசுவாசப் பிரமாணம் செய்யமாட்டோம்—எங்கள் தாய்மொழிகளிலேயே செய்வோம் என்கிற அளவுக்கு வந்திருக்கிருர்களோ, இந்த உணர்ச்சியும், ஒருபோதும் குறையாது — வளரும், வளரும், நிச்சயம் வளரும்.

★

தண்டம்தானு!

ஆகா! ஊகூ!! என்று புகழப்பட்ட 'கம்யூனிடி திட்டங்கள்,' சென்னை மாநிலத்தில் எப்படியிருக்கிறது என்பது பற்றி சின்னுட்களுக்கு முன்பு ஒரு செய்தி வந்தது. பார்லிமெண்டின் மதிப்புக் கமிட்டி, பரிசீலனை செய்து சமர்ப்பித்த அறிக்கையில், "சென்னை, மிக்க ஏமாற்றம் அளிக்கிறது," என்று குறிப்பிட்டிருந்தது. அதைக் குறிப்பிட்டு எழுதிய ஏடுகள், "உண்மைதான். அதனலேயே முதலமைச்சர் தன் வசம் அந்தப் பொறுப்பை வைத்துக்கொண்டிருக்கிருர், இப்போது. இனிமேல், எல்லாம் சரியாக நடக்கும்," என்று எழுதின. இதோ, ஒரு செய்தி வருகிறது!சென்னையில் மட்டுமல்ல, எங்கெங்கு கம்யூனிடி திட்டம் அமுல் நடத்தப்பட்டதோ, அங்கெல்லாம் இதே இலட்சணம்தானும். சிறந்த பொருளாதார நிபுணரான வி. ஆர். கே. வி. ராவ் என்பாரின் தலைமையில் பரிசீலனை செய்த ஒரு கமிட்டி வெளியிடுகிறது! எந்தெந்த நோக்கங்களுக்காக இந்த 'கம்யூனிடி புராஜக்ட்,' வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டதோ, அந்த நோக்கங்கள் நிறைவேறவில்லை என்று ராவ் குறிப்பிட்டுள்ளார்!!

ஆங்காங்குள்ளோர் ஒன்று சேர்ந்து தமது தேவைகளை அதிகரித்துக் கொள்ளவும், குடிசைத் தொழில் வளர்ச்சியில் சிரத்தை உண்டாக்குமாறு செய்வதுமே, இதன் முக்கிய குறிக்கோள்களாகும். இவை, தோற்றுவிட்டன என்றுஅபிப்பிராயப்படுகிருர், ராவ்.

இதைக் குறிப்பிட்டு, மான்செஸ்டர் கார்டியன்," எழுதுகிறது, கேலியும் கிண்டலும் கலக்க. இலண்டனிலிருந்து வெளிவரும் இந்த ஏடு, காங்கிரசாரைப் பாராட்டி எழுதுவதிலும், புகழ்வதிலும் ஆனந்தங் காண்பதாகும். அது, எழுதுகிறது, பின் வருமாறு:

"ஆசியாவிலேயே மிகமிக உன்னதமான ஒரு காரியம்! இதனல் கிராம மக்களின் வாழ்க்கைத்தரம் உயர்த்தப் படுகிறது! இந்த 'கம்யூனிடி புராஜக்ட்' திட்ட மூலம், கம்யூனிசத்துக்கு வேட்டு வைக்கப்படுகிறது! — என்றெல்லாம், கடந்த இரண்டு ஆண்டுகளில் பிரமாதமாகப் பேசப்பட்டது. அதுமட்டுமல்ல, ஏனைய நாடுகள், இந்தியாவைப் பார்த்து இந்த முறையை 'காப்பி' அடித்துக் காரியமாற்ற வேண்டும் என்றும் மிகைபடப் புகழ்ந்து கூறப்பட்டது. பலர், வெளிநாடுகளுக்குப் புத்தி போதிக்கவும் கிளம்பினர்கள்!!"

எந்தத் திட்டத்தை வெளிநாடுகள்கூடக் கற்றுக்கொள்ள வேண்டும் என்று பிரமாதமாகப் பேசப்பட்டதோ, அது பற்றித்தான் டாக்டர் ராவ் இந்தத் தீர்ப்பை வழங்கியிருக்கிருர். அதைக்கண்ட 'கார்டியன்,' "இப்படியெல்லாம் வர்ணிக்கப்பட்ட அத்திட்டம் குறித்து வரும், இத்தகவலோ சஞ்சலம் உண்டாக்குவதாக உள்ளது;" என்று குறிப்பிட்டிருக்கிறது.

★

4-ம் பக்கத் தொடர்ச்சி

நியாயாதிபன். ஆசிம் வம்சத் தலைவன் கமாலூதீன் கடல் அதிபதி. உமையா வம்சத் தலைவன். சுபைறு அடையல் முடையல் ஊர் மணியம், ராணுவ யுத்தர்கள், ஊர்க்காவல், நாட்டுக் காவல். கன்னி முதல், சேலமகரம் வரையுள்ள அரண்மனைக் குதிரைப் பாடிகளில் இந்தக் குடியானவர்கள் குதிரை விற்பனை செய்து கொள்வதை அரண்மனைக் காவலர், பாளையக் காவலர் தடை செய்யக்கூடாது. சந்திராதிக்கம், சந்திர சூரியப் பிரவேசம் உள்ள வரைக்கும் அம்பள உப்பள சுதந்திரராக,

'சகாப்தம் 798-ம் ஆண்டு இலக வருஷம் சீன மாசம், சுக்கர வாரம், உத்திர வேளையில் இந்தத் தாமிரப் பட்டயம், வெட்டி வளைந்து எழுதினேன். வீரவநல்லூர் கவன மூர்த்தி ஆசாரி'

இந்த அபூர்வமான சாசனத்தைப் படிக்கப் படிக்க நாம் வியப்பும் மகிழ்ச்சியும் ஒருங்கே அடைகின்றோம். பிறந்த நாட்டை விட்டு ஓடித் தப்பி அகதிகளாய் வந்தடைந்த அன்னியருக்குத் தமிழ்நாட்டில் இத்தனை வரவேற்பா? அதிலும் எவ்வளவு உரிமையும் சலுகையும்! கடற்கரைப் பகுதிகளில் குடியேற உரிமையும் முத்துக் குளிக்கவும் உப்பு விளைவிக்கவும் குதிரை வியாபாரம்செய்யச் சலுகைகளும் எவ்வளவு தாராளமாய் வழங்கப்படுகின்றன! பெரிய அரசுக்குள் அடங்கிய சிற்றரசுபோல அல்லவா மதிக்கப்படுகின்றனர்! அவர்களுடைய நிர்வாகம்தான் எவ்வளவு திறம்பட அமைத்துத் தரப்படுகிறது! ஒருவர் தேசாதிபதி; மற்றொருவர் நியாயாதிபதி; இன்னொருவர் கடலதிபதி! பின்னொருவர் மணியம்; இன்னும் இவர்களது ஊழியத்திற்கு வேண்டிய சலவைத் தொழிலாளி, இசை வேளாளர், மருத்துவர் முதலியோரையும் பாண்டிய மன்னன் திட்டம் செய்துதரும் பெற்றியே பெற்றியன்றோ?

*

மரக்கலராயர் என்ற பெயர் தான் எவ்வளவு அன்புடனும் அழகுடனும் சூட்டப்படுகின்றது! தமிழ் மன்னன் தென்னவனின் வண்மைக்கும் ஒண்மைக்கும் சான்ருக இன்றும் தமிழ்நாட்டில் அம் மரக்கலராயரின் வகுப்பினர் மரக்காயர் என்ற பெயருடன் கடற்கரையோரப் பகுதிகளிலெல்லாம் பல்கிப் பெருகிச் சிறந்த வணிக மன்னர்களாய் வாழ்கின்றனர். நல்ல தமிழர்களாய்த் திகழ்கின்றனர். தமிழ் வளர்க்கின்றனர். தமிழ் புரக்கின்றனர். தமிழ் வளர்த்த தந்தையாகிய சீதக்காதி மரக்காயரும் இவ்வகுப்பில் தோன்றித் துலங்கியவரே அல்லவா?

மரக்காயர் பரம்பரையில் வந்த மற்றொருவரது பெயர் சரித்திரத்தில் தனிச் சிறப்புப் பெற்றது. ஸையத் ஜமாலுத்தீன் என்பார்— தமிழ்நாட்டில் 13-ம் நூற்றூண்டின் பிற்பகுதியில் வாழ்ந்திருந்தவர். நல்ல உயர்சாதிக் குதிரைகளை அரேபிய நாட்டிலிருந்து தென் தமிழ் நாட்டிற்கு இறக்குமதி செய்யும் ஏகபோக உரிமை இவருக்கு உண்டு. பாண்டிய மன்னன் இவர்பால் மிகவும் பற்றுக்கொண்டவன். காயல் பட்டினமே இவரது தலைமைக் காரியாலய இடம். அரசர்க்கு அடுத்த பெருஞ் செல்வராய் ஜமாலுத்தீன் விளங்கினர். எத்தனையோ மரக்கலங்கள் அவரது ஏவலில் இருந்தன. அவை செங்கடலிலிருந்து சீனம் வரை சென்று பொன்னொடும் பொருளொடும் திரும்பும். உலகியலறிவும் நூலறிவும் மிகுந்த அவர் பிறரைத் தம் வயமாக்கத்தக்க பேச்சுத் திறமையும் உடையவர். பாண்டி மன்னர் சுந்தரபாண்டியத் தேவரின் பேரன்பையும் பெருநட்பையும் ஜமாலுத்தீன் பெற்றிருந்தார். கி. பி. 1286-ல் பாண்டிய மன்னர் சீன வேந்தன் குப்ளைகானிடம் ஒரு தமிழர்—தூதுக் குழுவை அனுப்பியபொழுது அதன் தலைவராக ஜமாலுத்தீனையே தெரிந்தெடுத்தார். சீனச் சரித்திரம் இதற்குச் சாட்சி பகர்கிறது.

இலங்கையில் பராக்ரமபாகு ஆண்ட நாளில் (1289-1293) பாண்டியர் இலங்கைமீது படையெடுத்தனர். அப்படைகளுக்குச் சேனாதிபதியாக ஜமாலுத்தீனே நியமிக்கப்பட்டார். பாண்டி மன்னர் சபையில் இவருக்கு எவ்வளவு மதிப்பும் இவரிடம் எத்துணை நம்பிக்கையும் உள்ளம் கலந்த நல்லெண்ணமும் இருந்தது என்பதற்கு இவை நல்ல எடுத்துக்காட்டுகளாம். இந்து முஸ்லீம் என்ற பேதம் எள்ளளவுமின்றித் தமிழ்நாட்டில் கூட்டுறவும் அமைதியும் அன்றுபோல இன்றும் நிலவுகின்றது.

தமிழர் தமக்குச் செய்த தலையாய நன்றியைத் தமிழ்நாட்டு முஸ்லீம்கள் என்றும மறந்ததில்லை. வடக்கேயிருந்து முஸ்லிம் அரசர்களும் தளபதிகளும் போர் கொண்டு தென்னாடு வந்த பொழுது தமிழ்நாட்டு முஸ்லிம்கள் தமிழரோடு தோள்தட்டி நின்று வடவரை எதிர்த்து வீரப் போர் செய்தனர். மாலிக்காபுர் என்ற தளபதியை எதிர்த்த வீர பாண்டியனின் சேனையில் 5000 முஸ்லிம் குதிரை வீரர்கள் இருந்தனர் என்று அக்காலச் சரித்திரக்காரனை குஸ்ரூ குறிப்பிடுகின்ருன். இந்து மன்னரின் கீழ் முஸ்லிம் படைகளை எதிர்த்துப் போராடிய அத் தமிழ் முஸ்லிம்களின் உள்ளப்பாங்கை உணர்ந்து கொள்ள அச் சரித்திரக்காரனுக்குப் போதிய ஞானம் இல்லை. ஆகையால் அவர்களை எளனமாகவே அவன் குறிப்பிடுகின்ருன். "இவர்கள் பாதி இந்துக்களே. மத வைராக்கியமோ ஒழுக்கமோ இல்லாதவர்கள். மரணம் தான் இவர்களுக்குச் சரியான தண்டனை. எனினும் இவர்கள் 'கலீமா'ச் சொல்ல அறிந்திருந்தபடியால் பிழைத்துப்போனுர்கள்" என்று அவன் எழுதிப்போந்தான்.

இங்ஙனமாகத் தமிழ்நாட்டில் இஸ்லாமியர் எழிலுடன் விளங்கியதைப் பார்த்தோம். தமிழ் முஸ்லிம்கள் இன்பத் தமிழிலே எண்ணற்ற காவியங்கள் எழுதியுள்ளனர். தமிழ்ப் புலவர்களைப் போற்றிப் பாராட்டி ஆதரித்துள்ளனர். தமிழனின் தன்மானத்திற்கு இழுக்கு வந்தபொழுது தங்கள் தோள்வலியாலும் வாள்வலியாலும் அதைக் காத்துள்ளனர். தமிழன்னையின் குழவிகளிலே அவர்களும் சிறந்த பங்கிற்கு உரியவர்.

பிறப்பு

'தாரகை' ஆசிரியர் ஏ. கே. வில்வம் அவர்களின் துணைவியார் அருண்மொழி அவர்கள் 22—5—57 அன்று ஒரு ஆண் மகவுக்குத் தாயானுர்கள். தாயும் சேயும் நலம்.

இரண்டு எழுத்து வர

"என்ன வாத்தியாரையா, ஆறு மாதமாகத்தான் என் மகனை அனுப்புகிறேன் பள்ளிக்கூடத்துக்கு — இன்னும் இரண்டெழுத்துக்கூட வரவில்லையே அவனுக்கு"

பிய்ந்துபோன கூரை வழியாக வரும் பகலவனின் கதிர்களிடமிருந்து ஒதுங்கிக்கொள்ள, ஒரு கை இல்லாத நாற்காலியை ஒதுக்கிக்கொள்ளும்போது மேசை ஆடிவிழாமல் பார்த்துக்கொண்டு, இரைச்சல்போடும் பிள்ளைகளையும் ஓர் முறை அடக்கும் தொடக்கப் பள்ளி ஆசிரியரிடம் இப்படிக் குறைப்பட்டுக்கொள்ளாத கிராமத்துப் பெற்றோர்கள் சிலர்தான்.

இப்படிக் குறைப்பட்டுக்கொள்ளும் பெற்றோரைப் பார்த்து அந்த ஆசிரியர் சீறிவிழ முடியாது—சினந்து பேசக் கூடாது—அவரும் அதைச் செய்ய எண்ணமாட்டார். வீண்வம்பு ஏன் என்ற அநுபவ அறிவு. ஆகவே,

"ஒழுங்காகப் பள்ளிக் கூடம் வரச்சொல்லு, எல்லாம் வரும்"

என்று சொல்லிவிட்டுத் தன்கருமமே கண்ணுவார்.

இரண்டெழுத்து வரவில்லை என்று குறைபடுவதும் உண்மைதான். பையன் ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வருவது இல்லை என்பதும் உண்மைதான். ஆசிரியர் சொன்னபடியே ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வருபனுக்காவது இரண்டெழுத்து வந்ததா என்று பார்த்தால் அதுவும் இருக்காது.

கிராமத்துப் பள்ளிக்கூடத்தை விட்டுத் தள்ளுங்கள்—பெரிய கட்டிடம் அழகான மரச்சாமான்கள்—அலங்காரமான பொருள்கள். அங்கே கிராமத்து ஆசிரியர் அளவுக்கு அவ்தி இல்லாத பேராசிரியர்கள் — கிராமத்துப் பையனைப் போல இல்லாது ஒழுங்காகவரும் கல்லூரி மாணாக்கன் — இவனுக்காவது படிப்பு வருகின்றதா என்று பார்த்தால் காணோம்.

சட்ட திட்டங்கள் — அமைப்பு முறைகள் அன்றாட திட்டங்கள் பாடமுறைகள் இவ்வளவும் உள்ளன. ஊருக்கு ஊர் பள்ளிக்கூடம் இருக்கின்றது. கற்பிக்க ஆசிரியர் உள்ளனர். ஆனாலும் ஆறுமாதத்திற்குப் பின்னும் இரண்டெழுத்து வரவில்லை பையனுக்கு. இதற்கு என்ன காரணம்?

இந்த நாட்டில் உள்ள குறையெதற்கும் வெள்ளையன்தான் காரணம் என்று சொல்லுகின்றவர்கள் 'இந்தக் கல்வி முறைதான் காரணம், இது கொடிய முறை இது தொலைந்தால்தான் கல்வி மலரும்' என்று முழங்குவார்கள். இதே கல்வி முறையில்தான் வெள்ளையன் தன்னாட்டில் கல்வி முறையை அமைத்திருக்கின்றான். அங்கே இரண்டெழுத்தும் வருகின்றது—இன்னும் பலவும் தெரிகின்றன. ஆனால் இங்கே மட்டும்தான் இரண்டெழுத்து வருவது முயற்கொம்பாக இருக்கிறது.

பள்ளிக்கூடம் இருக்கிறது, பாடதிட்டம் இருக்கிறது, அந்தத் திட்டத்தை ஒட்டி எழுதிய நூல் இருக்கிறது — நூல் விளக்கம் செய்ய ஆசிரியர்கள் உள்ளனர். ஆனால் இவையெல்லாம் மட்டும் கல்வியை ஊட்டிட முடியாது. கல்வி வளருவதற்கு இன்னும் பலவகையில் வாய்ப்புகள் இருத்தல் வேண்டும். தடைகள் குறைதல் வேண்டும். அப்போதுதான் உண்மையிலேயே கல்வி மணம் கமழும்.

நமது நாட்டில் கல்வி பரவாததற்கு உள்ள காரணங்களில் தலையாயது பொருளாதார அமைப்பாகும்.

ஆறுமாதம் பையன் வந்தான் பள்ளிக்கூடம். ஆனால் இரண்டு எழுத்து அவனுக்கு வரவில்லை

என்பது பெற்றவனின் முறையீடு. அகரத்தையும் ஆகாரத்தையும் எண்சுவடியையும் அக்கு அக்காகப் பிரித்துப்போடும் ஆசிரியர் 'அவன் ஒழுங்காக வரவில்லை' என்று குறைப்பட்டுக்கொள்ளுகின்றார். தலைக்குமேல் வேலை இருக்கிறது என்று குறையிட்ட பெற்றோரும் போய்விடுகின்றார்--பாடம் இன்னும் இருக்கிறது என்று ஆசிரியரும் தன்வேலையில் மூழ்கி விடுகின்றார்.

ஏன் அந்தப் பையன் ஒழுங்காக வரவில்லை?

என்பதை யாரும் எண்ணிப் பார்ப்பதில்லை. வீட்டில் வேலை இருந்திருக்கும் என்பது ஆசிரியருக்குத் தெரியும். 'அவன் வீட்டில் இருந்தால்தானே அவனும் அறுவடைக்கு வயலுக்கு வர முடியும்' என்பது குறை சொன்னவனுக்கும் தெரியும். இதுதான் தெரியுமே தவிர ஏன் இந்த நிலை என்று எண்ணத் தெரியாது. எண்ணிப்பார்க்க நேரம் கிடையாது. அதனால் 'சரி' என்று இரண்டுபேரும் மேற்கொண்டு தங்கள் வேலையில் ஈடுபடுகின்றனர்.

அவர்கள் வேண்டுமானால் அப்படி 'சரிதான்' போட்டுவிட்டுப் போய்விடலாம். ஆனால் எல்லோரும் அப்படிப் போய்விடலாமா? எப்படி இந்தச் சிக்கலை அவிழ்ப்பது என்பதை ஆராய வேண்டும்.

பையன் வீட்டில் இருந்தால்தான் 'அவளும்' அறுவடைக்குப் போகவே முடியும் என்றாகிறது. 'அவனும்' அறுவடைக்குப் போனால்தான் இரண்டு மணி கிடைக்கும். இரண்டு மணி சேர்த்தால்தான் சாப்பிடலாம். ஆகவே உயிருக்கு முக்கியமான உணவுக்கு, உணவைத் தேட வேண்டியஉழைப்புக்குஅந்தச்சிறுவன் அகரத்தையும் ஆகாரத்தையும் இகரத்தையும் ஈகாரத்தையும் எண்சுவடிக் கணக்கோடு சேர்த்து பள்ளிக்கூடத்தில் அந்த ஆசிரியருக்குத் துணையாக விட்டுவிட்டு வீட்டிற்கு வந்து இருக்க வேண்டும்—தன் ஆற்றலுக்கு ஏற்ற உழைப்பைச் செலவிட வேண்டும் வாழ்க்கை நடத்த. உழைத்து வாழுவது சிறந்ததுதான். ஆனால் அதற்காக உலகத்து அறிவை முன்னோரின் சிந்தனையைப் பெற வேண்டிய அந்தச் சிறு வயதில் அவன் பள்ளிக்கூடத்தை விட்டு விட்டு வரவேண்டுமா? ஆம். இன்றுள்ள சமுதாய அமைப்பின் படி பொருளாதார சீர்குலைவின் ஆட்சிக்கு அடிமைப்பட்டுள்ள வரை, அந்தக் கொடுமுறைக்கு இவனைப்

போன்ற சின்னஞ்சிறு பிஞ்சுகள் தங்கள் மூளை வளர்ச்சியைப் பலியிட்டுவிட்டு வீட்டிற்கு வரத்தான் வேண்டும். இரண்டெழுத்து மட்டும் என்ன, எதையும் அறியாமல் இருக்கத்தான் வேண்டும்.

இதைப்போல் அல்லல் படும் சிறுவர்கள் கவலை இல்லாமல் படிக்க வேண்டும் என்பதற்காகப் பள்ளிகளில் பகல் உணவு அளித்தால் போதும் என்று நமது அரசினர் எண்ணுகின்றனர். பகலில் உணவு தந்தால் அது வராத பிள்ளைகளையும் வரச்செய்யும் மருந்தாகும் என்கிறார்கள். ஒன்றுமே இல்லாததற்குஅது எவ்வளவோ மேல். ஆனால் இதுவே மருந்து இந்த மருந்திலேயே அறியாமை நோயைப் போக்கிட முடியும் என்று எண்ணிவிடக் கூடாது. பகலிலே பள்ளியில் அவனுக்கு உணவு கிடைக்கிறது. காலையும் இரவும் என்னஆவான்? அவனைப் பெற்றவர்கள் என்ன ஆவர்? இவனும்போய் ஏதாவது உழைத்தால்தான் அவர்களுக்கு ஏதாவது கிடைக்கிறது. அந்தக் கொடுமையினால்தான் ஆறுமாதமாகப் பள்ளிக்கூடம் வந்தும் அவனால் ஒழுங்காக வர இயலவில்லை. இவன் நிலையே மேல் — பள்ளிக்கூடம் போகிறான் ஒழுங்காகப் போகவில்லை; ஆனால் பள்ளிக்கூடத்திற்குப் பெயருக்காவது போகிறான். ஆனால் அவன் வயதுள்ள எத்துணையோ பிஞ்சுகள் கிராமப்புறங்களில் வயல்களில் மாடுகளின் பின்னும் ஆடுகளின் பின்னும் அலைந்து திரிகின்றனர். மேனிவாட வயலை வாட்டுகின்றனர். கொட்டும் மழையும் கோடை வெயிலும் அவர்களுக்கு ஒன்றாகவே இருக்கின்றன. நகரப் புறங்களில் வீதிக்கு வீதி வீடு வீடாக ஏறி இறங்கி வேலை கிடைக்குமா என்று கேட்டு அலுத்து, மூலைக்கு மூலை இருகை யேந்தி நின்று யார் யாரையோ 'அம்மா அப்பா' என்று கூவி அழைக்கின்றனர். நூலும் எழுதும் கோலும் ஏந்தி எக்காளமிட வேண்டிய அந்தப் பருவத்தில் அவர்கள் மாடு ஓட்டும் கோலும் பிறவும் ஏந்தி ஏமுறுதலைக் கண்டால் இதயமுடையோர் ஏக்கம் கொள்ளத்தான் செய்வர்.

ஒழுங்காகப் பள்ளிக்கூடம் வராதவனுக்கே இரண்டெழுத்து வரவில்லை என்றால் இவர்களுக்கு மன்ன வரப்போகிறது?

இந்தப் பொல்லாத பொருளாதார அமைப்பு தொலைந்து நல்லதோர் முறை ஏற்படட்டும், அப்போது இரண்டெழுத்துக்கு நான்கெழுத்தாகக் கற்றுத் தரலாம் என்று வாளா இருந்துவிடலாம் என்று நினைப்பதும் தவறு. ஏதேனும் வழிவகை தேடி கல்வியின் பயனை எல்லோரும் அடையச் செய்ய வேண்டும்.

அதற்கு என்ன வழி முறை என்று ஆராய்வதில் நாம் ஈடுபட வேண்டும்.

நல்ல பொருள் வசதி படைத்த குடும்பத்துப் பையன். பெற்றோர்கள் கல்வியின் பெருமையை உணராதவர்கள். அவன் வாழும் ஊரிலும் கல்வியின் மதிப்பு தெரிந்தவர்களைக் காணோம், உறவினர்களும் அப்படியே என்று உதாரணத்திற்காக வைத்துக் கொள்ளுவோம். இவன் பள்ளிக் கூடத்திற்கு ஒழுங்காக நாள் தோறும் போய் வருவதாகக் கொள்ளுவோம். இவனுக்காவது இரண்டெழுத்து வருமா — இது வரை இப்படிப்பட்ட பையன்களுக்கு வந்திருக்கின்றதா— என்று பார்த்தால் அங்கேயும் இல்லை என அறிகின்றோம்.

இந்தக் காலத்தில் கல்வி பள்ளிககூடத்தில் மட்டும் இல்லை; ஆசிரியர்கள் சொல்லும் சொற்களில் மட்டும் இல்லை; எழுதிக் காட்டும் எழுத்தில் மட்டும் இலலை. இவையெல்லாவற்றையும் கடந்து வீட்டிலே இருக்கிறது.

ஆம். நல்ல குடும்பம் ஒரு பல்கலைக் கழகம் எனபது அழகான ஒரு சொற்றொடர் மட்டும் அல்ல. பொருள் மிக்க ஒரு உண்மை. மனிதன் வளருவதற்கு முன், அவன் புறப் பொருள்களைக் கண்டு அறிவைப் பெறுவதற்கு முன், உலகத்தை அவனுக்குக் காட்டி, பொருள்களை அறிவிக்கும் பணியும், அவனுடைய பண்பை உருவாக்கும் தொண்டும் முதன் முதலில், வல்லமையோடு நடைபெறுகின்ற இடம் வீடுதான். வீட்டில் உருவாகும் எண்ணங்களே பிறகு நாட்டிலே நடமாடுகின்றன. பண்பாடு சிறப்பதும் முதன் முதலில் வீட்டினுள்தான். ஆகவே நல்ல கல்வி பெறுவதற்கு அடிப்படையான வித்து ஊன்றப்பட வேண்டிய இடம் வீடாகும், வீட்டில் ஊன்றப்படும் அந்த வித்தினுக்கு ஏற்பவே விளைவும் அமையும். பலருடைய வாழ்க்கையின் நிகழ்ச்சிகள் இதற்குச் சான்றாக அமைவனவாகும்.

வீட்டில் ஊன்றப்படும் இந்த வித்தை மேலும் வளர்ப்பது சமுதாயமாகும். வேலையை மட்டும் நம்பினால் போதும் என்று கருதும் சமுதாயத்தில் எவ்வாறு ஒருவனால் கல்வியில் கருத்தை யூன்ற முடியும்? இன்றும்கூட நாம் பெரிய நகரங்களில் கற்றவர்கள் மிகுதியாக வாழும் பகுதிகளில் இளைஞர்களிடையே கற்க வேண்டும் என்ற வேட்கை மிகுதியாகவும், கற்றவர்கள் குறைவாக உள்ள பகுதியில் உள்ள சிறுவர்களின் வேட்கை குறைவாகவும் இருப்பதனைக் காணலாம். நகரங்களில் உள்ள சிறார்களைவிட கிராமத்தில் உள்ள சிறுவர்கள் கல்வியில் ஊக்கம் குறைந்துள்ளதற்குக் காரணமும், இதுவே. சூழ்நிலையால் மனிதன் உருவாகின்றான் என்பதினால் சூழ்நிலையே அவனுடைய போக்கைச் சமைக்கின்றது என்பதனை அறிகின்றோம்.

இவ்வளவு பொறுப்புள்ள அந்த வீட்டில் ஒரு பெரியவர் இருந்துகொண்டு 'போய்வா பள்ளிக்கூடம்' என்று அசப்பாமல் "சரிதாண்டா, மகா பெரிய பள்ளிக்கூடம், ஒருநாள் போகாவிட்டால் என்ன குடிமுழுகிவிடுமாம், நான் கேட்கிறேன் அந்த வாத்தி யாரை படித்தவன் எல்லாம் என்னடா வாரிக் கட்டிக்கொண்டான். நாலு காசுக்கு நாய் படுகின்ற பாடுபடுகின்றான் போடா போ, போய் காய்கறி வாங்கிவா— கடைக்கு முனியன் போனால் கேள்" என்று சொன்னால் அவனுக்குக் கல்வியின் மீது எப்படி அக்கறை தோன்றும்? தோன்றினால்தான் எப்படி நிலைக்கும்? வளரும்?

நாம் ஈடுபாடுகொண்டுள்ள தொழிலும் நமது சிறார்களின் கல்வி வேட்கையைப்பற்றிக் கொள்ளுகின்றது. உழைத்துப் பிழைக்கும் குடும்பத்தில் கல்வியை எளிதில் நம்புவதில்லை. கல்வியால் வாழுவோன் உழைப்பை நாடுவதற்குத் தயங்குகின்றான். சமுதாயம் என்ற அளவிலும் கல்வி வேட்கை அந்தச் சமுதாயம் ஈடுபட்டுள்ள தொழில் துறையைச் சார்ந்தே அமைகின்றது. நம்முடைய சிறார்களுக்கு இரண்டு

எழுத்து வரவேண்டுமானால், நாம் உழைத்துப் பாடுபட்டுப் பிழைக்கின்றவர்களாக இருந்தாலும், அந்தக் கல்வியின் பெருமையை அவர்களுக்குச் சொல்லுவதை விட எடுத்துக்காட்ட முயல வேண்டும்.

இவையெல்லாம் தனி மனிதன் தன் சிறுவனுக்குக் கல்விபுகட்ட எடுத்துக்கொள்ளக் கூடிய முயற்சிகள். தனி மனிதன் திருந்தினால் நாடு திருந்தும், தனிமனிதன் ஏற்றம் பெற்றால் நாடு ஏற்றம் பெறும் என்று வளா இருத்தல் கூடாது. இது கூட்டு வாழ்க்கையுள்ள காலமாகும். எம் முயற்சியிலும் சமுதாய அடிப்படையில் செய்யப்படும் தன்மை இருத்தல் வேண்டும். அந்த வகையில் கல்விபெறத் துடிக்கும் கணக்கற்றவர்க்கு என்ன செய்ய இயலும்? பொருளாதார ஏற்றத்தாழ்வைப் போக்கும் பொதுமை வரட்டும் எனக் காத்திருக்கலாகாது. அது வரையில் என்ன செய்யலாம்?

மனிதனின் சிந்தனை, முன்பு இல்லாத எத்தனையோ புதுமைகளை இன்று படைத்து வியந்திருக்கின்றது. அன்று ஓரிருவருக்கு அரியதாக இருந்தவையெல்லாம் இன்று பலர்க்கு எளிதாக வாய்க்கின்றன.

அந்தப் புதுமைகளில் நாளிதழ்கள் சிறப்பானவை. ஒரு பெரிய பல்கலைக் கழகம் சந்திக்க இயலாத தொகையினரை நாள்தோறும் கண்டு உலகத்துச் செய்திகளைத் தெரிவிக்கும் வாய்ப்பு இவற்றினுக்கு உண்டு. அரிய செய்திகளை அறிவிக்கும் வல்லமை இவற்றிடை இருக்கின்றன. அறிவு வேகமாகவும் பெருந்தொகையினரிடையும் பரவுதற்கு நாளிதழ்களும், வார, மாத இதழ்களும் பெரிதும் பயன்படும். இவை தங்கள் பணியில் ஒன்றாக நாட்டுக்கு, மக்களுக்கு, அறிவு விளக்கம் தருவதனையும் கருதிப் பாடுபட்டால் பெருத்த பலன் காணலாம். பெரிய கல்விக் கூடங்கள் சாதிக்க இயலாதவைகளையும் இவை செயல்படுத்திக் காட்டலாம்.

வானொலியும் இந்தவகையில் பயன்படக் கூடியதே. ஆனால் இன்று நம் நாட்டில் செல்வங் கொழிக்கும் நிலையில் உள்ளவர்களே வானொலிப் பெட்டியைப் பற்றி நினைக்க இயலும். கஞ்சிக்கே ஆலாய்பறந்து 'அவனையும்' அறுவடைக்கு அழைத்துச் செல்லுவோருக்கு வானொலிப் பெட்டி வாங்கத்தான் வாய்ப்பு ஏது? வாங்கினாலும் கேட்டு அறிய நேரம் தான் எங்கே இருக்கின்றது?

பொதுவாக அமைந்துள்ள இலவச நூல் நிலையங்களும் கல்விக் கூடங்களாகப் பயன்படும் நிலை இருக்கின்றது, அந்த நூல் நிலையங்கள் பெயரளவில் பொதுவாகவும் இலவசமாகவும் இல்லாமல் உண்மையிலேயே எல்லோரும் சென்று சேரக்கூடிய பொதுவானதாகவும், எவருக்கும் எட்டக் கூடிய இலவசமானதாகவும் இருத்தல் வேண்டும். அப்போதுதான் அதனால் பயன் கிடைக்கும்.

இவையெல்லாம் ஓரளவு கல்வியறிவு பெற்றவர்கள் மேலும் பெறுதற்கு வாய்ப்பளிப்பனவாகும். படித்தவர்களைக் கேட்டறிந்தால் படிக்காதவர்களும் பயன் பெறலாம். ஆனால். நடைமுறையில் இது அவ்வளவாக இயலாத செயல். என்றால் படிப்பறிவு முன்னமே பெறாதவர்கள் புதியதாக ஒன்றுமே தெரிந்துகொள்ள இயலாதா? அதற்கு வழியே இல்லையா?

ஏன் இல்லை? இருக்கிறது.

இந்த நாட்டில் நூற்றுக்கு பதினைந்து பேருக்குத்தான் படிப்பறிவு உண்டு; அவர்களில் பத்து பேருக்கும் குறைவாகத்தான் நூல்களைப் படிக்கும், உணரும் ஆற்றல் உண்டு. ஆனால் நூற்றுக்கு நூறுபேரும் மாபாரதக் கதையையும், இராமாயணக் கதையையும், புராணக் கதைகளையும் நுட்பம் நுட்பமாகக் கிளைக் கதைகளையும் தெரிந்துள்ளனர்—கேட்டால் மறவாமல் சொல்லுவார்கள். இந்தக் கதைகள் உள்ள நூல்களை அவர்கள் படித்தது இல்லை. ஆனால் அதிலே உள்ள பொருள்களைத் தெரிந்துவைத்துள்ளனர். தங்களோடு தொடர்புடைய ஒரு பொருளைப்பற்றி எவ்வளவு விவரமாகச் செய்திகளைச் சொல்லுவார்களோ, அவ்வளவு விவரமாகச் செய்திகளைச் சொல்லுவார்களோ, அவ்வளவு விவரமாகச் சொல்லக் கூடிய விதத்தில் தெரிந்துவைத்துள்ளனர். இது எப்படி இயலுகின்றது?

இங்கு ஆடிய ஆடல்களும், பாடிய பாடல்களும், நடித்த நாடகங்களும் இந்தக் கதைகளின் பகுதிகள். கல்வியறிவு இல்லாதவர்கள் என்றாலும் கூத்தாக நிகழும் இவற்றைக் கண்டு கண்டு, அவை அவர்களுக்குத் தெரிந்த பொருளாக, பழகிய ஒன்றாக ஆகிவிட்டிருக்கின்றது.

அதேபோல் மக்களுக்குத் தெரிய வேண்டிய இன்றைய அறிவைக் கூத்துக்களின் மூலம், பாடல்களின் வாயிலாக, ஆடல்களின் வழியாக உணர்த்தினால் மிகமிக எளிதாக, பள்ளிக்கூடம் போகும் தொல்லை இல்லாமல்—அறிவின் பயனை எல்லோருககும் தரலாம். இது இயலக்கூடியது. வயது முதிர்ந்தவர்களைக் கூட்டி 'சொல்லு அ, ஆ' என்று வற்புறுத்தி அவர்களுடைய வெறுப்பையும் கடுப்பையும்தேடிக் கொள்ளுவதைவிட, அவர்களுடைய அன்பும் ஆர்வமும் பொங்க இந்த வழியில் முயலலாம். முயன்றால் வெற்றி கிடைக்கும். கல்வி அறிவைப் பெறும் வாயில் இது ஒன்றுதான்—ஒன்றேதான்—என்று பள்ளிக்கூடங்களின் கல்லூரிகளின் மதில் சுவர்களைச் சுற்றிச் சுற்றி வந்து ஏமாந்து கொண்டிருக்கத் தேவையில்லை. நாடகத்தின் வாயிலாக இவ்வளவு நல்ல பணியாற்ற இயலும் என்பதனை உணர்ந்தால் 'நாடகமாடிகள்' என்று குறை சொல்லவும் இடமிருக்காது.

★